புதுமைப்பித்தனும் கமலா அம்மையாரும்

செ. திவான்

புதுமைப்பித்தனும் கமலா அம்மையாரும்

செ.திவான் M.A.,M.Phil.,

நூலாசிரியரின் 122 வது நூல்

தலைப்பு	:	புதுமைப்பித்தனும் கமலா அம்மையாரும்
பொருள்	:	இலக்கியம்
ஆசிரியர்	:	செ.திவான்
பதிப்பு ஆண்டு	:	2020, ஜூன்
உரிமை	:	ஆசிரியருக்கே
பக்கங்கள்	:	80
அச்சிட்டோர்	:	குமரேசன், சிவசக்தி ஆர்ட்ஸ், சிவகாசி. செல்: 9443379005
அட்டை	:	பொன். வள்ளிநாயகம், நெல்லை. செல்: 9442328023
வடிவமைப்பு	:	அப்துல் நசீர், நெல்லை. செல்: 9489115236
விலை	:	ரூ. 50/-

சமர்ப்பணம்

புதுமைப்பித்தன் என்ற மகா கலைஞனுக்கும்
புதுமைப்பித்தனின் துணைவியார் கமலா அம்மையாருக்கும்

காணிக்கை

புதுமைப்பித்தன் விட்டுச்சென்ற படைப்புகளுக்கும்
புதுமைப்பித்தனின் புதல்வி சகோதரி தினகரி சொக்கலிங்கத்திற்கும்

– ரெகான் சுலைமான் பதிப்பகம்

ரெகான் சுலைமான் பதிப்பகம்

106F, 4A, திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி– 627002
போன்: 0462–2572665

புதுமைப்பித்தன் - பீடிகை

உலகளந்த பெருமாள் பிள்ளை

உலகளந்த பெருமாள் பிள்ளை – சைவ வேளாளர் குலம் – திருநெல்வேலி – இவர் வெள்ளையர் ஆட்சியின் போது தென்ஆற்காடு மாவட்டத்தில் கர்ணமாக பணிபுரிந்தார். அங்கு ஷதர் கோர்ட் கலெக்டராக இருந்த வெள்ளைக்காரதுரை உலகளந்த பெருமாள் பிள்ளை மீது இருந்த பற்றுதலினால் தாசில்தாராக நியமித்தார்.

விருத்தாசலம் பிள்ளை

அவரை அழைக்கும்போது வெள்ளைக்காரனுக்கு உலகளந்த பெருமாள் பிள்ளை பெயர் என்ற வாயில் வரவில்லை. தான் பணிபுரிந்த விருத்தாசலம் என்ற ஊரையே அவருக்குச் சூட்டி விருத்தாசலம் பிள்ளை என்று அழைத்தார்.

உலகளந்த பெருமாள் பிள்ளையின் பேரன் விருத்தாசலம் பிள்ளை. அவரது மனைவி அழகம்மை. இருவருக்கும் பிறந்தவர் சொக்கலிங்கம் பிள்ளை.

சொக்கலிங்கம் பிள்ளை

வி. சொக்கலிங்கம் பிள்ளையின் துணைவியார் பர்வதத்தம்மாள். கடலூருக்கு அருகில் திருப்பாதிரிப்புலியூரில் வி. சொக்கலிங்கம் பிள்ளை தாசில்தாராகப் பணியாற்றும் போது 1906 ஏப்ரல் 25 இல் புதுமைப்பித்தன் பிறந்தார். தாத்தா விருத்தாசலம் பிள்ளையின் பெயரே புதுமைப்பித்தனின் இயற்பெயர். புதுமைப்பித்தனுக்கு ருக்மணி என்ற செல்லத்தம்மாள் என்ற சகோதரியும் உண்டு. 1914 இல் தாயார் காலமானார். எட்டு வயதில் தாயார் காலமான பிறகு சொக்கலிங்கம்பிள்ளை காந்திமதியம்மாளை மணந்தார். மூன்று ஆண்பிள்ளைகள் அவருக்குப் பிறந்தனர். (அய்யா தொ.மு.சி. ரகுநாதன் தரும் தகவல். பெயர் விவரங்கள் இல்லை; நண்பர் ஆ.இரா. வேங்கடாசலபதி, சொ.முத்துசாமி என்ற ஒரு தம்பி பற்றி குறிப்பிட்டுள்ளார்)

செஞ்சி, திண்டிவனம், கள்ளக்குறிச்சியில் துவக்ககால கல்வியைத் தொடர்ந்தார் புதுமைப்பித்தன். 1918 இல்

சொக்கலிங்கம் பிள்ளை ஒய்வுபெற்று திருநெல்வேலி **வண்ணார்பேட்டையில்** குடியேறினார்.

குஷ்டந்தீர்ந்ததுறை

"கும்பினிக்காரன் வந்த புதுசு. அந்தக் காலத்திலே சுலோசன முதலியார் பாலம் கட்டலே. நம்ம சாலைத் தெருத தான் செப்பரை வரைக்கும் செல்லும். அங்கே தான் ஆற்றைக் கடக்க வேண்டும். கொக்கிரகுளத்திலே இப்பொழுது கச்சேரிகள் இருக்கும். அங்கேதான் கும்பினியான் சரக்குகளைக் பிடித்துப்போடும் இடம். அப்போது ஒரு இருநூறு முந்நூறு வண்ணான்களைக் குடியேற்றி வைத்தான் கும்பினிக்காரன். **குஷ்டந்தீர்ந்ததுறை** *என்ற பெயர்* **'வண்ணாரப்பேட்டை'** *என்று ஆயிற்று. (புதுமைப்பித்தன், 'விநாயக சதுர்த்தி', மணிக்கொடி 30.9.1936)*

ஆர்ச். யோவான் ஸ்தாபனப் பள்ளியிலும், மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரியிலும் பயின்ற புதுமைப்பித்தன் 1931 இல் பி.ஏ. பட்டம் பெற்றார்.

பி.டி. சுப்பிரமணியபிள்ளை

பி. டி. சுப்பிரமணிய பிள்ளையின் மகள் கமலா அம்மையாரை புதுமைப்பித்தனுக்கு திருமணம் செய்ய நிச்சயம் ஆயிற்று. திருமணம் வண்ணாரப்பேட்டையில் வைத்து நடந்தது. பெண் வீட்டார் நான்கு நாட்களுக்கு முன்பே வந்துவிட்டார்கள். மூன்றாவது நாள் சாயங்கால வேளையில் பின்பக்க முற்றத்தில் நின்றுகொண்டிருந்த கமலாம்மையாரை பின்பக்கமாக வந்து கைகளைப் பிடித்தார் புதுமைப்பித்தன். அம்மையார் திடுக்கிட்டுத் திமிறினார். **''பயப்படாதே, நாளைக்கு நான்தான் உன் கழுத்தில் தாலி கட்டப் போகிறேன்''** என்றார்.

பாண்டி நாட்டு வெள்ளாளப்பிள்ளை

'நான் பிள்ளையை நேரில் பார்த்ததில்லை. யார் என்று எப்படித் தெரியும்? பயத்தில் உடம்பு நடுங்கிக் கொண்டே இருந்தது. மறுநாள் அவரே மனையில் வந்து அமர்ந்த பிறகே என் உயிர் என்னிடம் திரும்பி வந்தது' என்கிறார் கமலா அம்மையார். (நன்றி; காதல் தொகுப்பாசிரியர் வே.மு. பொதிய

வெற்பன். கமலா புதுமைப்பித்தன், புதுமைப்பித்தனின் சம்சாரபந்தம், பரிசல், சென்னை, 2005, பக்கம் 32, 33)

1932 ஜூலை 14

புதுமைப்பித்தன் கமலா அம்மையாரை திருமணம் செய்தது 1932 ஜீலை 14. (உமா, 1960 இதழில் கமலா புதுமைப்பித்தன் தந்த தகவல் முற்கூறிய வே.மு. பொதிய வெற்பன் நூல் பக்கம் 11) (ஜூலை 1931 என்று தொ.மு.சி.ரகுநாதன் கூறியுள்ளார். புதுமைப்பித்தன் வரலாறு 2006, பக்கம் 14) அதனையே முனைவர் ஆ.இரா. வேங்கடசலபதியும் கூறுகிறார்) பொதிகை புதுமைப்பித்தன் நூற்றாண்டு ஆய்வுமலரில் முனைவர் நா.உசாதேவி, முனைவர் கட்டளை கைலாசம் ஆகியோரும் கூறியுள்ளனர். வல்லிக்கண்ணனும் அதனையே குறிப்பிடுகிறார்)

சுப்பிரமணிய பிள்ளை

திருமணம் நடந்து வருடமொன்று கழிந்தது. தந்தைக்கும் தனையனுக்கும் தகராறு வளர்ந்தது. தறுதலை தண்டச்சோறு தந்தை அர்ஜித்தார். தனையன் புதுமைப்பித்தனோ தனது சித்தப்பா சுப்பிரமணியபிள்ளை வீட்டில் பாளையங்கோட்டையில் பத்து நாட்கள் தங்கினார். தந்தை அறிந்தார். தம்பியிடம் தனையனை விரட்டச் சொன்னார் அங்கிருந்து. திருவனந்தபுரம் சென்றார்; ஓரிருநாட்கள் மாமனார் வீட்டில் இருந்தார். அதன்பின் திருவனந்தபுரத்திலிருந்து எங்கு போவது? இரயில் நிலையம் வந்தார். அங்கு வந்தபின்தான் புதுமைப்பித்தன் துணைவியாருடன் திண்டுக்கல் செல்வது என்று டிக்கெட் எடுத்தார்.

அத்தை பிள்ளை (திண்டுக்கல்)

திண்டுக்கல்லில் புதுமைப்பித்தனின் அத்தை பிள்ளை வாழ்ந்து வந்ததார். அந்த வீட்டில் புதுமைப்பித்தனின் தங்கை ருக்மணி அம்மாள் ‘உடல்நிலைக் குறைவாக தங்கியிருந்தார். அவருக்கு உதவிட வாருங்கள் என்ற கடிதம் ஏற்கனவே வந்திருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாலைந்து மாதங்கள் திண்டுக்கல்லிலே காலம் கழிந்தது புதுமைப்பித்தனுக்கு. திண்டுக்கல்லில் இருந்த புதுமைப்பித்தன் கதை கட்டுரைகள் எழுதி சென்னைக்கு அனுப்பிவைத்தார்.

அதிசய மனிதர் வ.ரா.

சென்னைக்கு புதுமைப்பித்தனை அழைத்தார் வ.ரா. கமலா அம்மையார், தனது கைவளையல்கள விற்றுப் பணம் கொடுத்து புதுமைப்பித்தனை சென்னைக்கு அனுப்பிவைத்து விட்டு, தான் திருவனந்தபுரம் வந்து சேர்ந்தார். திருவனந்தபுரத்திற்கு வந்த மூன்று நான்கு மாதங்களில் அவரது தந்தையார் சுப்பிரணியபிள்ளை மறைந்தார். ஆறேழு மாதங்களில் கமலா அம்மையார் சென்னை சென்றார்.

முதல் படைப்பு

1933 அக்டோபர் *18* இல் காந்தி இதழில் **‘குலோப் ஜான் காதல்’** முதல் படைப்பு வெளிவந்தது. தொடர்ந்து *1934* ஏப்ரலிலிருந்து மணிக்கொடியில் எழுதினார். இந்தச் சூழலில்தான் சென்னைக்கு வந்து சேர்ந்த புதுமைப்பித்தன் பொருளாதார வசதியின்றி கஷ்டப்பட்டார்.

ஊழியனின் ஊழியம்

ஆகஸ்ட் *1934* முதல் பிப்பிரவரி *1935* வரை **ஊழியனில்** உதவியாசிரியராகப் பணிபுரிந்தார். வறுமை வாட்டியது. தந்தையிடம் உதவிக் கேட்டு கடிதம் எழுதினார்.

வி.சொக்கலிங்கம் பிள்ளை

புதுமைப்பித்தனின் தந்தை வி. சொக்கலிங்கம் பிள்ளை. அப்போது **‘இந்திய – ஐரோப்பிய நாட்டு இனங்கள்’** என்ற நூலை எழுதி வெளியிடும் முயற்சியில் இருந்தார்.

936 பக்கங்கள் கொண்ட இந்த நூலின் பிரதியை தினமணி ஆசிரியர் திரு. வைத்தியநாதன் அவர்களிடம் நேரில் தந்தேன். அவர்களும் தினமணி ஞாயிறு மலரில் ‘கலாரசிகன்’ பகுதியில் அது குறித்து எழுதியிருந்தார். புதுமைப்பித்தனின் தந்தையாரும் எழுத்தாளர் என்பதோடு நிறுத்திக் கொள்வோம்.

‘இந்திய – ஐரோப்பிய நாட்டு இனங்கள்’ *என்ற நூலின் முகப்புப் பக்கம்.*

THE ORIGIN
OF THE
INDO-EUROPEAN RACES
AND
PEOPLES

V. CHOCKALINGAM PILLAI

VOL. I.

FIRST EDITION

INTRODUCTION[1]

SECTION I. WHAT IS MEANT BY THE TITLE INDO-EUROPEAN RACES?

The Indo-European problem has long been engaging the attention of the world, but up to this date it has not received a correct answer, and this failure we attribute to an unscientific handling of the subject. The object of the present work is to abandon the present faulty method, point out the right direction, and institute a correct investigation in the field of Indo-European phenomenon on a strictly scientific basis.

In any field of research there is every probability of the investigation being run on correct lines if we are able to define the object of our study. And in the present case such a correct conception has not been obtained. We shall soon cure this flaw, and give an accurate definition to the title Indo-European races.

It is Europe that first started the theme, but notwithstanding all her long toil and labour in the field, her efforts have not been crowned with success. Many are the causes which contributed to this failure. Firstly the subject was not started either with a scientific vision or born of a scientific spirit. And at the time the investigation was started, Europe was enveloped in darkness and modern science was still in its infancy. And secondly it was a blind chance that brought the subject to the forefront. Europe in the course of her Indian contact became acquainted with the Sanskrit or Aryan tongue. A knowledge of Latin and Greek forms an important ingredient in the educational curriculum of all the western peoples. And their love for the classical languages is so great that they are found studying them even to the detriment of their own vernaculars. Such is the state of things in Europe. And her students as soon as they came to know of the existence of Sanskrit began to study it, and even this superficial study revealed

[1] Generally a preface is not at all read, or perused only by a curious few. As in our case it contains many important matters relevent to the subject on hand, we ask our readers first to persuse the preface and next take up the reading of the introduction to the work itself.

936

his festivals 145-157; conducting peace negotiation 87 sqq; his temples 141-147; the magical key furnished by that title 147-150; the reasons for the anthropomorphic form given to him and his flock in the Indian continent 76-77; a Bull and a peacock image stationed in front of his altar 77-78

Velans with Bull face 54; part settle in India and part go to Europe 15; is the name assumed by the Bulls in the later phases of their life and the various shapes it is seen assuming in Europe 237

Velan Epos 73; silent about the Wolf 94;

Velan language and its four hybrid offsprings Celtic, Teutonic, Vendic and Lettic 4, 21,

Vellalas 133 and passim

Velo—Suran war—a narrative of that fight 80-90; not fought in the Indian continent 80-81; land fight 85, 276, 388, 587; tree fight 85, 280 sqq, 588; peace scene at its close 86-93, 389, 592; is the first reliable mark in Indo-European History, 70 and passim; the sources from which we obtained information on the subject, 71-73

Velo—Suran lands 40

Vendo-Lett,—his Epos 859; his primitive history 862, 870 sqq.

Village community of the Vellalas or Bulls 132-141

Volscians 233

Volsung Episode 784 sqq.

W

War scene jumps from the cradle to Europe 151

War fought by the Indo-European races in Europe 16 17

War creed of the Bull 659 sqq.

War between the Gods and Mortals 332 sqq.

Weapons — used by Indo-European progenitors 49 sqq; used by primitive man — 47 sqq.

Week day Gauge 650

Welsh 239

Words derived from the roots Vel and Velan 147-150; also note 8

Worlds nine in Teutonic Epos 284 sqq.

World power or fight for the leadership of the world among Indo-European races 71

Wolf 232

Wolf fable 596 sqq.

Wolf fight 601 sqq.

Wolfings 722 sqq.

X

X Language 3; its descendants 5-42

Y

Y Language 3; its descendants 5-42

Yngling legend 664 sqq.

வி. சொக்கலிங்கம் பிள்ளை நூலின் முதலும் முடிவும்

புதுமைப்பித்தனும் சிறுகதைகளும்

தமிழ்ச் சிறுகதையின் முன்னோடியான புதுமைப்பித்தன் படைத்த படைப்புகள் ஏராளம்.

ஆ.இரா. வேங்கடாசலபதி

திருமிகு. ஆ.இரா. வேங்கடாசலபதியை பதிப்பாசிரியராகக் கொண்டு **'அன்னை இட்ட தீ'** *(1998 - 363 பக்கங்கள்)* **புதுமைப்பித்தன் கதைகள்** *முதற்பதிப்பு (ஆகஸ்ட் 2000), திருத்தங்களுடன் கூடிய இரண்டாம் பதிப்பு (ஜூன் 2001 - பக்கங்கள் 824), 'புதுமைப்பித்தனின் கட்டுரைகள்' (ஆகஸ்ட் 2002 - 656 பக்கங்கள்) புதுமைப்பித்தன் மொழிபெயர்ப்புகள் (டிசம்பர் 2006 - 839 பக்கங்கள்), அருமையான செம்பதிப்பாக நாகர்கோவில் 'காலச்சுவடு' பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டது.*

சுந்தர ராமசாமி (1931 - 2005)

எனது பிரியத்திற்குரிய பண்பாளர் சுந்தர ராமசாமி **'புதுமைப்பித்தனின் கதைகள்' சு.ரா. குறிப்பேடு'** *எனும் நூலாக டிசம்பர் 2005 இல் 220 பக்கங்களில் தந்துள்ளார்கள் (14.10.2005 இல் அமெரிக்காவில் அவர்கள் காலமான பிறகு இந்த நூல் வெளிவந்தது.)*

ஏற்கனவே புதுமைப்பித்தனது கதைகள் குறித்து எவ்வளவோ விமர்சனங்கள் மதிப்புரைகள் வந்துள்ளது.

ரா.ஸ்ரீ. தேசிகன் எம்.ஏ.

2.2.1940 இல் ரா.ஸ்ரீ. தேசிகன் எம்.ஏ. முன்னுரையோடு பக்கம் 1 முதல் 15 வரை புதுமைப்பித்தன் கதைகள் 15 பக்க விமர்சனத்தோடு 29 கதைகள் வெளியிட்டது. அப்போது முதல் கதையாக புதுமைப்பித்தன் போட்டது **'ஒரு நாள் கழிந்தது'** *இதோ அந்தப்பக்கங்கள்...*

புதுமைப் பித்தன் கதைகள்

நவயுகப் பிர[illegible] ... 262
[illegible] ... 266
[illegible] ... 273
— ? — ... 279

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
1.	ஒரு நாள் கழிந்தது	...	1
2.	விநாயக சதுர்த்தி	...	17
3.	துன்பக் கேணி	...	29
4.	சிற்பியின் நரகம்	...	70
5.	வேதாளம் சொன்ன கதை	...	80
6.	பிரம்ம ராக்ஷஸ்	...	91
7.	வாழ்க்கை	...	111
8.	தெரு விளக்கு	...	120
9.	கலியாணி	...	123
10.	கவந்தனும் காமனும்	...	146
11.	ஞானக் குகை	...	150
12.	திறந்த ஜன்னல்	...	159
13.	மனித யந்திரம்	...	163
14.	கட்டில் பேசுகிறது	...	177
15.	கடிதம்	...	181
16.	கனவுப் பெண்	...	188
17.	ஆண் சிங்கம்	...	196
18.	இது மிஷின் யுகம் !	...	212
19.	அகல்யை	...	215
20.	சங்குத் தேவனின் தர்மம்	...	222
21.	பறிமுதல்	...	230
22.	காலனும் கிழவியும்	...	236
23.	கோபாலபுரம்	...	245
24.	கொன்ற சிரிப்பு	...	251
25.	பொன்னகரம்	...	258
26.	சாயங்கால மயக்கம்	...	262
27.	நினைவுப் பாதை	...	266
28.	மனக் குகை ஓவியங்கள்	...	273
29.	— ? —	...	279

இரண்டாம் பதிப்பு 1947

புதுமைப்பித்தனது அதே 29 கதைகள் 1947 இல் இரண்டாவது பதிப்பாக முற்சொன்ன முன்னுரையோடு வெளிவந்தது. இப்போது புதுமைப்பித்தன் முதல் கதையாக இருந்த ‘ஒரு நாள் கழிந்தது’ என்பதனை நான்காவது கதையாக கொண்டு சென்றார். மூன்றாவதாக இருந்த ‘துன்பக்கேணி’ கதையினை முதலாவதாகக் கொண்டு சென்றார்.

துன்பக்கேணி

1947 இல் ‘துன்பக்கேணி’ கதையை முதல் கதையாகப் போடுமளவிற்கு துயரத்திலும் வறுமையிலும் புதுமைப்பித்தன் வாடியதை இது காட்டுகிறது என்று கருதுகிறேன். இதோ அந்தப் பக்கங்கள்


புதுமைப் பித்தன்
கதைகள்

‘புதும ப் பித்தன்’

நவயுகப் பிரசுராலயம்
காரைக்குடி :: சென்னை

பொருளடக்கம்

	பொருள்		பக்கம்
1.	துன்பக் கேணி	...	1
2.	சிற்பியின் நரகம்	...	42
3.	கலியாணி	...	52
4.	ஒரு நாள் கழிந்தது	...	75
5.	விநாயக சதுர்த்தி	...	91
6.	வேதாளம் சொன்ன கதை	...	103
7.	பிரம்ம ராக்ஷஸ்	...	114
8.	வாழ்க்கை	...	134
9.	தெரு விளக்கு	...	143
10.	கவந்தனும் காமனும்	...	146
11.	ஞானக் குகை	...	150
12.	திறந்த ஜன்னல்	...	159
13.	மனித யந்திரம்	...	163
14.	கட்டில் பேசுகிறது	...	177
15.	கடிதம்	...	181
16.	கனவுப் பெண்	...	189
17.	ஆண் சிங்கம்	...	197
18.	இது மிஷின் யுகம்!	...	212
19.	அகல்யை	...	215
20.	சங்குத் தேவனின் தர்மம்	...	222
21.	பறிமுதல்	...	230
22.	காலனும் கிழவியும்	...	236
23.	கோபாலபுரம்	...	245
24.	கொன்ற சிரிப்பு	...	251
25.	பொன்னகரம்	...	258
26.	சாயங்கால மயக்கம்	...	262
27.	நினைவுப் பாதை	...	266
28.	மனக் குகை ஓவியங்கள்	...	273
29.	— ? —	...	280

க.நா. சுப்பிரமண்யம் (1912-1988)

1.6.1987 இல் ஐந்திணைப் பதிப்பாக வெளியீடாக வெளிவந்தது புதுமைப்பித்தனின் படைப்புகள் (சிறுகதைகள்) நூலுக்கு கா.ந.சுப்பிரமண்யம் எழுதிய முன்னுரை **'புதுமையும் பித்தமும்'** *(பக்கம் XXV (25) முதல் LXXXVI (86) வரை) வெளிவந்தது. அந்த நூல் 914 பக்கங்கள் வரை என்னிடம் உள்ளது.*

தொ.மு.சி.ரகுநாதன்

'புதுமைப்பித்தன் என்னும் பிரம்மராாக்ஷஸ்' *ராஜ் கௌதமன் நூலும் (2018, 187 பக்கங்கள்)* **புதுமைப்பித்தமும் பிரேமிள் சித்தமும்** *என்ற வே.மு. பொதிய வெற்பன் நூலும் 2005 (128 பக்கங்கள்,* **'புதுமைப்பித்தன் கதைகள் சில விமர்சனங்களும் விஷமத்தனங்களும்'** *தொ.மு.சி.ரகுநாதன் எழுதியது 1999 (530 பக்கங்கள்) டாக்டர் நா. ஆறுமுகம் எழுதிய* **'புதுமைப்பித்தன் கதைகளில் சமுதாய விமர்சனம்'** *1994 (126 பக்கங்கள்) வெளிவந்துள்ளது.*

டாக்டர் தி.முருகரத்தனம் 'புதுமைப்பித்தன் சிறுகதைக்கலை' *எனும் நூலை 1976 இல் 207 பக்கங்களில் தந்துள்ளார். வெ.பானுமதி* **'ஒப்பிலக்கியம் புதுமைப்பித்தன் பிரேம்சந்த்'** *எனும் நூலை 2008 இல் 146 பக்கங்களில் தந்துள்ளார்.*

பேராசிரியர் சிவசு

எனது சிந்தை நிறை பேராசிரியர் சிவசு **'பித்தனில் வாசித்த பத்து'** *எனும் நூலை 2020 இல் 108 பக்கங்களில் வெளியிட்டுள்ளார்.*

Dr. A. Subramonia Pillai

Evaluation of Putumaipittan as a Short - Story writer in Tamil' *எனும் ஆங்கில நூலினை 171 பக்கங்களில் டாக்டர் ஏ. சுப்பிரமணிய பிள்ளை 1993 இல் வெளியிட்டுள்ளார்.*

தனித்தமிழ் இலக்கியக் கழகம் - பா. வளன் அரசு

1975-இல் பாளையங்கோட்டை தூய யோவான கல்லூரியில் இளங்கலை (பி.ஏ) பயின்று கொண்டிருந்த வேளை. தனித்தமிழ் இலக்கியக் கழகம் பேராசிரியர் பா. வளன்அரசு அறிவிப்பில் அவ்வாண்டு ஆய்வுக்குரிய தலைப்பு 'புதுமைப்பித்தன் கதைகள்'

கல்லூரி வாழ்வில் எழுத்தில் பக்குவம் பெறாத காலத்தில் அநதப் போட்டியில் அடியேனும் பங்கேற்றேன். 1975 களிலே புதுமைப்பித்தனது பாதிக்கதைகளைப் படித்து கட்டுரை தீட்டினேன். வெற்றிவாய்ப்பை இழந்தேன்.

வே.மு.பொதியவெற்பன் - புதுமைப்பித்தன் கதைகள்

வே. முத்தையா பாக்கியம் பொதிய வெற்பன் அரசினர் ஆடவர் கல்லூரி குடந்தை போட்டியில் பங்கேற்று முதல்பரிசை தட்டிச் சென்றார். அவரது ஆராய்ச்சிக் கட்டுரை **புதுமைப்பித்தன் கதைகள்** என்று நூலாக 1976 இல் 94 பக்கங்களில் வெளிவந்தது. புதுமைப்பித்தன் கதைகள் குறித்து நிறைய நூல்கள் வெளிவந்து கொண்டே இருக்கிறது.

புதுமைப்பித்தனது சிறுகதைகள்

1. ஆற்றங்கரைப் பிள்ளையார்
2. சங்குத் தேவனின் தர்மம்
3. பொன்னகரம்
4. திருக்குறள் செய்த திருக்கூத்து
5. கட்டில் பேசுகிறது
6. மோட்சம்
7. ராமனாதனின் கடிதம்
8. காளி கோவில்
9. உணர்ச்சியின் அடிமைகள்
10. நிகும்பலை
11. நியாயம்
12. புதிய நந்தன்
13. கவந்தனும் காமனும்
14. இது மிஷின் யுகம்
15. ஒப்பந்தம்
16. திறந்த ஜன்னல்
17. தனி ஒருவனுக்கு
18. பறிமுதல்
19. தெரு விளக்கு
20. அகல்யை
21. கடிதம்
22. சித்தம் போக்கு
23. நன்மை பயக்குமெனின்
24. தியாகமூர்த்தி
25. கண்ணன் குழல்
26. வாடா மல்லிகை
27. கொடுக்காப்புளி மரம்
28. நம்பிக்கை
29. புதிய ஒளி
30. கனவுப் பெண்
31. நானே கொன்றேன்
32. சாயங்கால மயக்கம்
33. தேக்கங் கன்றுகள்
34. இரண்டு உலகங்கள்
35. புதிய கந்த புராணம்
36. குப்பனின் கனவு
37. பாட்டியின் தீபாவளி
38. ஆண்மை
39. கடவுளின் பிரதிநிதி
40. கோபாலய்யங்காரின் மனைவி
41. சணப்பன் கோழி
42. மாயவலை

43. பால்வண்ணம் பிள்ளை
44. குற்றவாளி யார்?
45. வழி
46. வெளிப்பூச்சு
47. கோபாலபுரம்
48. 'பூசனிக்காய்' அம்பி
49. சாமாவின் தவறு
50. கலியாணி
51. ஒரு கொலை அனுபவம்
52. துன்பக் கேணி
53. டாக்டர் சம்பத்
54. ஞானக் குகை
55. சிற்பியின் நகரம்
56. வாழ்க்கை
57. புதிய கூண்டு
58. பிரம்ம ராக்ஷஸ்
59. விநாயக சதுர்த்தி
60. ஒரு நாள் கழிந்தது
61. வேதாளம் சொன்ன கதை
62. மனித யந்திரம்
63. காலனும் கிழவியும்
64. நாசகாரக் கும்பல்
65. நினைவுப் பாதை
66. ?
67. மனக்குகை ஓவியங்கள்
68. நியாயந்தான்
69. உபதேசம்
70. புரட்சி மனப்பான்மை
71. அபிநவ-ஸ்நாப்
72. விபரீத ஆசை
73. சாமியாரும் குழந்தையும் சீடையும்
74. செவ்வாய் தோஷம்
75. கொன்ற சிரிப்பு
76. பொய்க் குதிரை
77. கருச்சிதைவு
78. சொன்ன சொல்
79. மகாமசானம்
80. காஞ்சனை
81. செல்லம்மாள்
82. சாப விமோசனம்
83. கட்டிலை விட்டிறங்காக் கதை
84. கடவுளும் கந்தாசமிப் பிள்ளையும்
85. சுப்பையா பிள்ளையின் காதல்கள்
86. சித்தி
87. சிவசிதம்பர சேவுகம்
88. நிர்விகற்ப சமாதி
89. நிசமும் நினைப்பும்
90. எப்போதும் முடிவிலே இன்பம்
91. கபாடபுரம்
92. அன்று இரவு
93. படபடப்பு
94. அவதாரம்
95. கயிற்றரவு
96. இந்தப்பாவி
97. இலக்கிய மம்ம நாயனார் புராணம்
98. தமிழ் படித்த பெண்டாட்டி
99. குற்றவாளி யார்?
100. ஒரு கொலை அனுபவம்

குறு நாவல் சிற்றன்னை
நாவல் அன்னை இட்ட தீ
(முற்றுப் பெறாதது)

இதை தவிர கவிதைகள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புக் கதைகள் ஏராளம் ஏராளம். அனைத்தும் காலச்சுவடு பதிப்பாக, பதிப்பாசிரியர் திரு. ஆ.இரா.வேங்கடலாசலபதி அவர்களைக் கொண்டு வெளிவந்துள்ளது.

புதுமைப்பித்தன் பதிப்பகம் & சந்தியா பதிப்பகம்

புதுமைப்பித்தன் கதைகள் 103 என்று புதுமைப்பித்தன் பதிப்பகம் & சந்தியா பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

ஸ்ரீசெண்பகா பதிப்பகம்

ஸ்ரீசெண்பகா பதிப்பக வெளியீடாக புதுமைப்பித்தனின் கதைகள் குறு நாவல்கள் அனைத்தும் ஆறு நூல்களாக மறுதொகுப்புச் செய்யப்பட்டு வெளிவந்துள்ளது.

கௌரா ஏஜென்ஸீஸ்

அமரர் புதுமைப்பித்தனின் ‘சிறுகதைக் களஞ்சியம்’ என்று 108 சிறுகதைகளை சென்னை கௌரா ஏஜென்ஸீஸ் ராமையா பதிப்பகம் மூலம் வெளியிட்டுள்ளது.

ஆர்.கே. கண்ணன்

புதுமைப்பித்தன் குறித்த ஆய்வு, வ.விஜயபாஸ்கரனின் டிசம்பர் இதழில் ஆர்.கே.கண்ணன், டிசம்பர் 1955, மார்ச் 1956 எழுதியுள்ளார்.

‘சாமியாரும் குழந்தையும் சீடையும்’ அதில் ‘என்ன இருக்கிறது’ எனும் ஆர்.கே.கண்ணனின் கட்டுரை ஜூலை 1957 சரஸ்வதியில் வெளிவந்துள்ளது.

வல்லிக்கண்ணன்

எனது பிரியத்திற்குரிய பண்பாளர் வல்லிக்கண்ணன் ஜூலை 1957 இதழில் புதுமைப்பித்தனை இலக்கிய மேதை என்று வர்ணிக்கிறார்.

ரா. ஹரி

எழுத்தாளர்களுக்கு அவர் ஒரு எச்சரிக்கை என்ற புதுமைப்பித்தன் குறித்த கட்டுரையை ரா.ஹரி ஜூலை 1956 சரஸ்வதியில் தந்துள்ளார்.

தி.க.சி

என் நினைவில் வாழும் அய்யா தி.க.சிவசங்கரன் '**தமிழ் அன்னையின் அருந்தவப்புதல்வன்**' எனும் கட்டுரையை ஆகஸ்ட்–செப்டம்பர்–அக்டோபர் 1956 சரஸ்வதி இதழில் புதுமைப்பித்தன் குறித்து எழுதியுள்ளார். **வீர வணக்கம் வேண்டாம் என்ற கட்டுரை ஜூலை 1957 சரஸ்வதியில் வந்துள்ளது.** '**புதுமைப்பித்தனைப் பற்றி இன்னும் கொஞ்சம்**' கட்டுரை ஆகஸ்ட் 1957 இல் வந்துள்ளது.

வ.விஜயபாஸ்கரன்

புதுமைப்பித்தன் 'சிறுகதை சாம்ராட்' என்று விஜயபாஸ்கரன் சரஸ்வதி இதழில் 1957 இல் எழுதியுள்ளார்.

'**காலத்தால் சாகாத கதை மன்னன்**' எனும் கட்டுரையை ஜூலை 1957 சரஸ்வதி இதழில் தொ.மு.சி.ரகுநாதன் தந்துள்ளார்.

க.கைலாசபதி

'**புதுமைப்பித்தனும் இலங்கையும்**' என்ற கட்டுரை சரஸ்வதி ஜூலை 1957 இதழில் க.கைலாசபதியால் எழுதப்பட்டது.

ஜெயகாந்தன்

ஞானபீட விருதுபெற்ற ஜெயகாந்தன் எழுதிய '**புதுமைப்பித்தனின் பொன்னகரம்**' ஜூலை 1957 சரஸ்வதி இதழில் வெளிந்துள்ளது.

சரவணப்பெருமாள் பிள்ளை

திருநெல்வேலி வண்ணாரப்பேட்டை 1891 இல் அக்டோபர் 12 ஆம் நாளில் சரவணப்பிள்ளை – பாப்பம்மாள் புதல்வராய் பிறந்தவர் எஸ்.வையாபுரிப்பிள்ளை (1956 பிப்பிரவரி 12 இரவு 11.50 மணிக்கு மறைந்தார்.)

பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை

ஜனவரி 1961 சரஸ்வதி இதழில் பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளையின் '**புதுமைப்பித்தன்**' எனும் கட்டுரை வெளிவந்தது.

தமிழ்ச்சுடர் மணிகள்

1949 இல் தமிழ்ச்சுடர்மணிகள் எனும் நூலை எழுதினார். அதன் இரண்டாம் பதிப்பு 1952–இல் எஸ்.வையாபுரிப்பிள்ளை திருவனந்தபுரம் ஸர்வ கலாசாலையில் பணியாற்றியபோது 431 பக்கங்களில் வெளிவந்தது. அதில் புதுமைப்பித்தனைப் பற்றி எதுவும் எழுதவில்லை எஸ். வையாபுரிப்பிள்ளை. 1959–ல் 3ஆம் பதிப்பு வந்தபோதும் அதில் 'புதுமைப்பித்தன்' பற்றிய கட்டுரை இடம் பெறவில்லை.

'வேடிக்கை மனிதர் புதுமைப்பித்தன்'

1951 இல் புதுமைப்பித்தன் நினைவுமலரில் 'புதுமைப்பித்தன்' என்ற கட்டுரை எழுதினார். பின்னர் 'பறை' இதழில் இது வெளிவந்துள்ளது. இக்கட்டுரையின் பிற்பகுதி **'வேடிக்கை மனிதர் புதுமைப்பித்தன்'** *என்று முல்லை முத்தையாவின் சிறு வெளியீட்டில் 1952 அக்டோபர்* **ஆத்மசக்தியுடைவர்** *என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்டது. ஆனால் 1948–ல் வெளிவந்த தமிழ்ச்சுடர்மணிகள் நூலிலும், அதன் பின் 1952 இல் வந்த இரண்டாம் பதிப்பில் இக்கட்டுரை இடம்பெறவில்லை.*

வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றத்தார், வையாபுரிப்பிள்ளை நூற்களஞ்சியம் ஆறாம் தொகுதி தமிழ்ச்சுடர்மணிகள் நூற்றாண்டு நினைவு வெளியீடு 6, ஏப்ரல் 1995 இல் வெளியிட்ட 343 பக்கங்களைக் கொண்ட நூலில் பக்கம் 299 முதலில் 303 வரை வையாபுரிப் பிள்ளையின் புதுமைப்பித்தன் பற்றிய கட்டுரையை இடம்பெறச் செய்துள்ளனர்.

ஆசிய ஜோதிப்பிரசுரம்

சென்னை மைலாப்பூரில் செயல்பட்டு வந்த ஆசிய ஜோதி பிரசுரம் கதைக் கொடிமலர் 1 எனும் நூலை 1944 ஏப்ரலில் வெளியிட்டுள்ளது. அதில் புதுமைப்பித்தனது சிறுகதை எதுவும் இல்லை.

தி.ஜ.ர.

தி.ஜ.ர. முன்னுரையோடு வெளிவந்த அந்தக்கதைத் தொகுப்பில் வையாபுரிப்பிள்ளையின் 'பேசாமடந்தை' பி.ஸ்ரீ.யின் 'வீரபாண்டியன்', பி.எஸ்.ராமையாவின் 'கார்னிவல்' கு.ப.ராஜகோபாலனின் 'முன்தலைமுறை'

ந.சிதம்பரசுப்பிரமணியனின் 'அலமேலுவின் அஹிம்சை', அ.கி.ஜயராமனின் 'பிரகிருதியின் காதல்', குகப்பிரியையின் 'சுல்தான் மகள்' ரா.ஸ்ரீ.தேசிகனின் 'பொய்?', க.நா.சுப்பிரமணியத்தின் 'கிரகப்பிரவேசம்', தி.ப. பத்மநாபனின் 'தீர்த்த யாத்திரை' பி.எம்.கண்ணனின் 'தெய்வசங்கல்பம்', பி.கோதண்டராமனின் 'வளையல்காரன்' புரசு பாலகிருஷ்ணனின் 'நாஸ்திகன்' மஞ்சேரி எஸ்.ஈசுவரனின் 'ராட்டினம்' ஆகிய சிறுகதைகள் வெளிவந்துள்ளன. புதுமைப்பித்தன் உயிரோடு உலகில் உலவியபோதே இலக்கிய ஆளுமைகள் என்று சொல்லிக் கொள்பவர்கள் புதுமைப்பித்தனை போற்றவில்லை என்பது உறுதி உறுதி.

வேறுபாடும் வேண்டுகோளும்

'புதுமைப்பித்தன் கதைகள் வெளியீட்டு விவரங்களும் பாட வேறுபாடுகளும்' என்று பேராசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதி தனது 'புதுமைப்பித்தன் கதைகள்' செம்பதிப்பு நூலில் பக்கம் 798 முதல் 818 வரை கடும் முயற்சி எடுத்து தந்துள்ளார்கள். அதற்கென தனி பாராட்டுகள் அவருக்கு.

ஆ.இரா. வேங்கடாசலபதி

பேராசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதி அவர்களுக்கு பணிவான வேண்டுகோள். தங்களது நூலில் பக்கம் 792 இல் 793 இல் புதுமைப்பித்தன் கதைகள் 1940 இலும் 1947 இலும் வெளிவந்ததைத் தெரிவித்துள்ளீர்கள்.

அப்போது வெளிவந்த 29 கதைகளிலும் (புதுமைப்பித்தன் வாழ்ந்தபோது வெளிவந்தவை). கதையின் தலைப்பிற்கு அருகில் கதையின் உள்ளேவரும் வரியைப் போட்டுள்ளார்.

இதோ : 1940 ஆம் ஆண்டின் பதிப்பில் வந்தது சான்றுக்கு...

கதை 29

?

'வான் தகட்டில் தெரிகிறதே ஒரு நட்சத்திரம்,
அதைப் போலத்தான் இலட்சியம், தெய்வம்!'

1947 ஆம் ஆண்டில் வெளிவந்த நூலிலும் அதனை அப்படியே பின்பற்றுகிறார். இதோ அதற்கான சான்று

?

'வான் தகட்டில் தெரிகிறதே ஒரு நட்சத்திரம்,

அதைப் போலத்தான் இலட்சியம், தெய்வம் !'

தாங்கள் பாட வேறுபாடு பகுதியில் *1940, 1947*களில் புதுமைப்பித்தன் வெளியிட்ட தனது *29* கதைகளிலும் தலைப்பில் கதையில் உள்ள முக்கிய வரிகள் இடம்பெறச்செய்துள்ளார் என்பதனை பதிவு செய்கிறேன்.

வருங்காலத்தில் தாங்கள் தொடர்ந்து வெளியிடும் புதுமைப்பித்தன் கதைகள் நூலில் பாட வேறுபாடு பகுதியில் இதனைச் சேர்த்துக் குறிப்பிட வேண்டுமென்று பணிவோடு வேண்டுகிறேன்.

புதுமைப்பித்தனும் இஸ்லாமும்

மடத்துக்கடை சங்கரலிங்கம் பிள்ளை

அன்றைய திருநெல்வேலி மாவட்டம் இன்றைய தென்காசி மாவட்டம். தென்காசியில் மடத்துக்கடை சங்கரலிங்கம்பிள்ளை புகழ்பெற்றவர். அவருக்கு வேலாயுதம்பிள்ளை, சிதம்பரம் பிள்ளை (இவர் ஆஷ் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர்) சொக்கலிங்கம்பிள்ளை என்று மூன்று புதல்வர்கள்.

டி.எஸ். சொக்கலிங்கம்

1889 மே 3 இல் பிறந்தவர் தென்காசி சொக்கலிங்கம் பிள்ளை (மறைவு 9-1-1966) டி.எஸ். சொக்கலிங்கம் 1934 செப்டம்பர் 11 இல் மகாகவி பாரதி நினைவுநாளில் துவங்கிய தினமணி ஏட்டின் ஆசிரியர்.

நா. ராமரத்தினம் - புதுமைப்பித்தன்

தினமணியில் இசை, திரைப்பட விமர்சனங்கள் நா.ராமரத்தினம் எழுதுவார். அப்போது தயை தாட்சண்யமின்றி புத்தக மதிப்புரைகள் எழுதிப் புகழ்பெற்றவர் புதுமைப்பித்தன். இவர்கள் துணை ஆசிரியர்கள்.

நவயுகப் பிரசுராலயம்

புதுமைப்பித்தனின் சிறுகதைகளை முதன்முதலாக நூல்வடிவில் டி.எஸ். சொக்கலிங்கம்பிள்ளை நிர்வாக இயக்குநராக இருந்த நவயுகப் பிரசுராலயம் வெளியிட்டது.

புதுமைப்பித்தனின் மேதைத்தன்மையை சொக்கலிங்கம்பிள்ளை நன்கு உணர்ந்து தம் மனதில் மட்டுமின்றி, எழுத்துச் சுதந்திரத்திலும் நல்ல இடம் அளித்தார்.

சிதம்பரம் தண்டபாணி பிள்ளை

ஏ.என். சிவராமன், ஆர்.வெங்கடராஜுலு நாயுடு, புதுமைப்பித்தன், இளங்கோவன், என்.இராமரத்தினம், எஸ்.எஸ். மாரிசாமி, ஆல்பின் பெர்னாண்டோ, ஏ.ஜி. வேங்கடாச்சாரி, சிதம்பரம் தண்டபாணி பிள்ளை, சினிமா உலகம் பி.எஸ். செட்டியார், வீரகேசரி ஹரிஹரன், ஏ.கே. சந்திரசேகர முதலியார், தமிழ் நேசன் சுப்பிரமணிய ஐயர்.

தமிழன் ஆசிரியர் மாசிலாமணி பிள்ளை

தமிழன் ஆசிரியர் மாசிலாமணி பிள்ளை, ஆனந்த போதினி சீனிவாசராவ், காசி விஸ்வநாதன், வி.என். ரங்கசாமி ஐயங்கார், கு.அழகிரிசாமி, மயிலை நாதன் போன்றவர்கள் டி.எஸ். சொக்கலிங்கத்தின் கீழ் பணியாற்றியவர்கள்.

1943 செப்டம்பர்

இரண்டாம் உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை, தினமணி உதவி ஆசிரியர்களுக்கு 'யுத்தப்படி' வழங்க வற்புறுத்தினார் டி.எஸ். சொக்கலிங்கம். தினமணி நிர்வாகம் மறுத்தது. உதவி ஆசிரியர்கள் தங்களது பணியைத் துறந்தார்கள். நிர்வாகமும் அதனை ஏற்றது. எனவே உதவி ஆசிரியர்களுடன் ஒன்றுபட்டு டி.எஸ் சொக்கலிங்கம் பிள்ளை ராஜினாமா செய்தார். 1944 இல் டி.எஸ். சொக்கலிங்கம் 'தினசரி' இதழைத் துவங்கினார். அந்தப் பணியிலும் சேர்ந்து பின்னர் அங்கிருந்தும் புதுமைப்பித்தன் வெளியேறினார்.

நெல்லையில்

வறுமை வாட்டியது. புதுமைப்பித்தன் தந்தையோடு போராடினார். அவரும் அசையவில்லை. இறுதியில் முக்கால் அல்லது ஒரு கோட்டை விதைப்பாடு நஞ்சை நிலத்தைச் சாசனம் பண்ணிக் கொடுத்தார். (ஒரு தொகையை ஒப்புக் கொண்டார். அதை கோர்ட்டில் டிகிரி வாங்கித்தான் புதுமைப் பித்தன் பெற்றார்)

நிலத்தை வாங்கிய முஸ்லிம்

புதுமைப்பித்தனது பாகத்திற்கு கிடைத்த நிலத்தை விற்றார். அதனை ஒரு முஸ்லிம் வாங்கினார். குடும்பச் சொத்தை ஒரு முஸ்லிமுக்குப் போயா விற்பது. நமது வயலுக்கு மத்தியிலே அயல்சாதிக்காரனைப் புகுத்திவிட்டானே பாவி! குலத்துரோகி முதலிய விருதுகள் புதுமைப்பித்தனுக்கு வந்துசேர்ந்தன.

பழிக்குப்பழி

'அவர்களைப் பழிக்குப்பழியாக வாங்க எனக்கு இந்த ஒரு வழிதான் திறந்து கிடந்தது. உபயோகப்படுத்திவிட்டேன். என் குடும்பத்தார் என்னைத் தவிக்க விட்டார்கள். அந்தப் பாவத்தின் கறையை ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கட்டும் என்று தான் அவர்களுடைய தொடர்ச்சியான நிலத்தைத் துண்டாக்கி இடையே வேறு ஒரு சொந்தக்காரனைச் சொருகிவிட்டேன். தினம் தினம் அவர்கள் நினைக்கட்டும். சங்கடம் வரும்போதாவது நினைக்கட்டும். இதுவே புதுமைப்பித்தன் ஆத்மார்த்தமாகக் கூறிக்கொள்ளும் சமாதானம், வெளிப்படையாகக் கூறிக்கொள்ளும் வந்தனம். (தொ.மு.சி ரகுநாதன் புதுமைப்பித்தனின் வரலாறு, சென்னை 2006, பக்கம் 47). புதுமைப்பித்தன் தனது பாகத்தில் கிடைத்த நிலத்தை விற்றது ஒரு முஸ்லிமிற்கு.

எம்.என்.ராய்

பெரும் புரட்சியாளர்களான லெனின், டிராட்ஸ்கி, ஸ்டாலின் ஆகியோருடன் நேரடித் தொடர்பு கொண்டு செயலாற்றியவர் எம்.என்.ராய். 'தீவிர மனிதாபிமானம்' என்ற அரசியல் இயக்கத்தின் நிறுவனர். (He was the founder of the Humanist Movement in India) *(பிறப்பு 1887 மார்ச் மறைவு 1954 ஜனவரி) முப்பதற்கும் மேலான புத்தகங்களை எழுதிய எம்.என்.ராய் எழுதிய நூல்* **'இஸ்லாமின் வரலாற்றுப் பாத்திரம்'.** *இதற்கு 14.2.1938 தினமணியில் சொ.விருத்தாசலம் என்ற பெயரில் மதிப்புரை தந்துள்ளார். (பார்க்க, புதுமைப்பித்தன் அன்னை இட்ட தீ, பதிப்பாசிரியர் ஆ.இரா. வேங்கடாசலபதி, நாகர்கோவில் 1998, 170-172)*

இஸ்லாமின் வரலாற்றுப் பாத்திரம்

"இஸ்லாம் தர்மம் அக்காலத்தில் அரேபியாவில் பேய்க்கூட்டமாக அலைந்து திரிந்தவர்களை மனிதர்களாக மாற்றியது. அந்த உற்சாகத்தில் அவர்கள் வீரர்களாக பரிணமித்து ஒரு சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தனர்" *என்று சொ. விருத்தாசலம் ஓரிடத்தில் இஸ்லாமியரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.*

சொ. விருத்தாசலம்

புதுமைப்பித்தன் துவக்க காலங்களில் சொ. விருத்தாசலம் என்ற பெயரில் எழுதினார். நூல்களையும் வெளியிட்டுள்ளார். அதற்குச் சான்று இதோ.



பேஸிஸ்ட் ஜடாமுனி

சொ. விருத்தாசலம், பி. ஏ.

நவயுகப்பிரசுராலயம்

...ரைட்] ஜீ. டி. மதராஸ் [விலை ரூ. 1-8-0

Historical role of Islam - M.N. Roy

புதுதில்லி கிரிட்டிக்கல் கெஸ்ட் (Critical Quest) பொடி எழுத்துக்களில் பக்கத்திற்கு 41 வரிகளில் அந்த ஆங்கில நூலை 2006 இல் மறுபதிப்பு செய்து வெளியிட்டதை வாசித்தேன். அந்த நூலில் எம்.என்.ராய் தன் கருத்து மட்டுமல்ல, பிஷர் (H.A.L. Fisher), எட்வர்டு கிப்பன் (Gibben) டிராப்பர் (J.W.Drafer), பின்லே (Finlay), லாஞ்ச் (F.A.Lange), ரெனான் (Renan), ஹேவல் (Havell), எலியட் (Elliot) போன்ற சரித்திர ஆசிரியர்களை மேற்கோள் காட்டி அந்த நூலைப் படைத்துள்ளார். அந்த நூலுக்குத்தான் 14.2.1938 பிப்பிரவரி தினமணியில் சொ. விருத்தாசலம் என்ற புதுமைப்பித்தன் மதிப்புரை தந்துள்ளார்.

தர்ஜுமா

புதுமைப்பித்தன் தனது பிரியமுள்ள துணைவியார் கமலா அம்மையாரிடம் பேசும்போது 'தர்ஜுமா' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

மொழிபெயர்ப்பு

"உன் தந்தி வந்த போது நான் தினமணி பத்திரிகையில் தந்திகளை எல்லாம் பிரித்து வைத்து 'தர்ஜுமா' தொழிலில்

ஈடுபட்டிருந்தேன்" என்கிறார் புதுமைப்பித்தன். இந்த தர்ஜூமா என்பது அரபிச் சொல். 'தர்சமா' என்பது சரியான பிரயோகம். ஆனால் பேச்சு வழக்கில் தர்ஜூமா என்றே எல்லோரும் சொல்வார்கள்.

தர்ஜூமா என்றால் மொழிபெயர்ப்பு என்று பொருளாகும். இஸ்லாமியர் பயன்படுத்தும் தர்ஜூமா எனும் அரபிச் சொல்லை புதுமைப்பித்தன் பயன்படுத்துவதை அவரது துணைவியார் கமலா புதுமைப்பித்தன் கூறியுள்ளார். (புதுமைப்பித்தன் சம்சாரபந்தம், பக்கம் 34) ரசமட்டம் என்ற புனைப்பெயரில் புதுமைப்பித்தன் எழுதிய 'இல்லையெனில் திருடு இல்லையாகுமா? என்ற மதிப்புரையில் 'தர்ஜூமா' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். (தினமணி 11.8.1943)

ஆண்டான் கவிராயன்

பட்டணங்களைப்பற்றி ஆண்டான் அபிப்பிராயம் என்ற 'ஊழியன்' இதழ் 15.2.1935 இல் எழுதிய கட்டுரையில் கயிற்றாறு பற்றிய 'பாளை மனம் கமழ்கின்ற' எனத் துவங்கும் பாடலை காளமேகப் புலவர் பாடியதாகவும், ஆண்டான் கவிராயர் பாடியதாகவும் சொல்லப்படுகின்றது.

"ஆண்டான் கவிராயர் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ஒரு முஸ்லிமென்று கூறும் ஒரு கட்சியுண்டு. இது விவாதத்திற்குரிய விஷயம்" என்று சொ.வி. என்ற பெயரில் புதுமைப்பித்தன் சொல்லியுள்ளார்.

தனி ஒருவனுக்கு

12.8.1934 மணிக்கொடி இதழில் புதுமைப்பித்தன் எழுதிய 'தனி ஒருவனுக்கு'.

இருளிலே ஒரு உருவம் நகர்ந்து நகர்ந்து சோற்றுப்பானையை அணுகுகிறது. சுவாமியார்தான் பசியின் தனியரசிற்கு முன் எந்தச் சுடலைமாடன்தான் எதிர்க்க முடியும். வாரி வாரி ஆத்திரத்துடன் கொதிக்கும் சோற்றை வாயில் திணிக்கிறார். அவ்வளவு தான் ஒரு கவளத்திலே இவருடைய இவ்வுலக ஆசை நிறைவேறியது.

சற்று தூரத்திலிருந்த சுடலை பக்தர்கள் இவர் ஒரு கவளம் எடுக்கும் போதே கண்டு தடுக்க ஓடிவந்தார்கள். கிட்ட

நெருங்கியதும் தண்டிப்பதற்குச் சுவாமியார் பிணம் தான் கிடந்தது. மாடனின் சக்தி 'அருள்' என்ற வியந்தார்கள். ...சுடலையின் சக்திக்காக அன்று இரட்டிப்புப் பூசை என்று எழுதியிருப்பார் புதுமைப்பித்தன்.

பகுத்தறிவாளர்

பசியின் கொடுமையால் வெந்து கொண்டிருக்கும் சூடான சோற்றைத் தின்று மாண்ட சாமியார். பகுத்தறிவு நோக்கில் எழுதப்பட்ட இந்தக் கதையை பலமுறை வாசித்துள்ளேன்.

நாசகாரக்கும்பல்

மணிக்கொடி 1.11.1937 இல் புதுமைப்பித்தன் எழுதிய கதை நாசகாரக்கும்பல். இக்கதை குறித்து பல்வேறு விமர்சனங்கள் வந்துள்ளன.

சுந்தர ராமசாமி

புதுமைப்பித்தன் கதைகள் சு.ரா. குறிப்பேடு பக்கம் 151–153 இல் இதற்கான விமர்சனம் வந்துள்ளது.

வே.மு. பொதியவெற்பன்

'புதுமைப்பித்தன் கதைகள்' நூலில் பக்கம் 46 இல் இதற்கான தன் கருத்தை தந்துள்ளார்.

தி.முருகரத்தனம்

'நாசகாரகும்பல் சமூகத்தில் தீண்டாதார் உறும் துயரத்தை – சித்திரவதையைத் தீட்டிக் காட்டுகின்றன என்று தி.முருகரத்தனம் புதுமைப்பித்தன் சிறுகதை தொகுப்பில் பக்கம் 99 ல் தந்துள்ளார்.

ஆர்.கே.கண்ணன்

சரஸ்வதி மார்ச் 1958 இதழில் ஆர்.கே.கண்ணன் எழுதுகிறார். 'நாசகாரக்கும்பல்' என்கிற கதை புதுமைப்பித்தனின் இயற்கைவாதப் போக்கின் சிகரம் இது. யதார்த்தவாத இலக்கிய எல்லையைத் தொடுமளவுக்குத் தாவிச் சென்று, எட்டாமலே நின்று விட்ட கதை இது. இந்தக்கதையிலே புதுமைப்பித்தன் சாதிக்கும் இலக்கிய – சமுதாயப் பார்வையின் வீச்சு இருக்கிறதே. **அது வேறெந்தக் கதையிலும் அதற்கு முன்போ பின்போ சாதிக்கவில்லை.**

நிலப்பிரபுத்துவக் கொடுமையின் கீழ் அவதிப்படும் ஒரு கிராமத்தை படம்பிடித்துக் காட்டும் கதை (சரஸ்வதி, களஞ் சியம், தொகுப்பாசிரியர் வா.விஜயபாஸ்கரன் சென்னை, 2001, பக்கம் 293).

டாக்டர் நா.ஆறுமுகம்

'புதுமைப்பித்தன் கதையில் சமுதாய விமர்சனம்' *நூலில் நாசகாரக் கும்பல் பற்றி பக்கம் 82 முதல் 91 வரை எழுதியுள்ளார். கதைப் பெயர் கதைப் போக்கில் எங்கும் இடம்பெறவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார் டாக்டர் நா. ஆறுமுகம்.*

டாக்டர் விசுவநாதபிள்ளை

அழகியநம்பியாபுரத்தில் அவர்தான் எல்லாம் பண்ணையார் விசுவநாதபிள்ளை.

மருதப்பன்

மருத்துவர் (சவரத் தொழிலாளி) மருதப்பன் வாங்க நினைத்த நிலத்தை பண்ணையார் வாங்கிவிடுகிறார். பண்ணையார் மனைவி இறப்பு இறுதி ஊர்வலத்தில் சங்கு ஊத அந்த சமூகம் மறுப்பு. **'என் வயிறெறியறாப்பலே போகணும்'** *என்று மருதப்பன் மனைவி சபிக்கிறார். மருதப்பன் கட்டிவைத்து அடிக்கப்படுகிறான். பின் அவிழ்த்துவிடப் படுகிறான்.*

இஸ்லாத்தைத் தளுவினாஹ!

கதையின் முடிவென்ன? சவரத் தொழிலாளி மருதப்பன் இஸ்லாத்தைத் தழுவி கொழும்பில் கடை வைத்திருக்கும் மாப்பிளை மரக்காயர் கடைக்கு மானேஜராகப் போகிறான்.

புதுமைப்பித்தனது வரிகள் இதோ!

'நம்ம வைத்தியர்வாளும், அவுஹ பொஞ்சாதியும் நேத்துத்தான் இஸ்லாத்தைத் தளுவினாஹ! *இந்த பஸ்ல தான் நம்ப கடெலே மானேசராயிருக்க கொழும்புக்குப் போராஹ! என்றார் மரைக்காயர்.*

புதுமைப்பித்தன், 'மருதப்பன் இஸ்லாத்திற்கு மாறினான்', 'இஸ்லாத்திற்கு மாற்றப்பட்டான்' என்று எழுதவில்லை. **'இஸ்லாத்தை தழுவினாஹ!** *என்று எழுதியுள்ளார்.*

அறிஞர் அண்ணா

குழந்தையைத் தாய் தழுவுவதுபோல் தமிழகம் இஸ்லாத்தை அரவணைத்துக் கொண்டது என்பார் அறிஞர் அண்ணா. அதே அடிப்படையில் இஸ்லாம் சமுதாய மேடு பள்ளங்களில் சிக்கித் தவித்தவர்களை சமூக விடுதலை பெறச் செய்யும் சர்வரோக நிவாரணியாக இருந்ததால் மருதப்பன் 'இஸ்லாத்தைத் தழுவினார்' என்று புதுமைப்பித்தன் எழுதியது மிக முக்கியமானது. வரலாற்றில் இஸ்லாம் வாள் கொண்டு பரப்பப்பட்டது என்ற கருத்திற்கு எதிராக மக்கள் தாங்களே முன்வந்து ஏற்றுக் கொண்டது என்பதனை புதுமைப்பித்தனது நாசகாரக் கும்பல் கதை தெள்ளத்தெளிவாக அறிவிக்கிறது என்பது எளியேனது அபிப்ராயம்!

புதுமைப்பித்தனும் சினிமாத்துறையும்

சினிமாத்துறையில் புகுவது என்ற முடிவிற்கு வந்தார் புதுமைப்பித்தன். ஜெமினியில் 'ஔவையார்' சரித்திரம் படமாக்கத் திட்டம் உருவானது. மணிக்கொடியில் தன்னோடு கதைகள் எழுதிவந்த கி.ராமச்சந்திரன் (கி.ரா) புதுமைப்பித்தன் இருவருமாகச் சேர்ந்து கதை வசனம் எழுத ஒப்பந்தமானது. ஆனால் புதுமைப்பித்தனது கதையோ, வசனமோ பயன்படுத்தப்படவில்லை. புதுமைப்பித்தன் மறைந்து 5 ஆண்டுகளுக்குப்பின் 15.8.1953 இல் 'ஔவையார்' திரைப்படம் வெளிவந்தது. தமிழத்துரை உலகில் அந்த ஆண்டு 36 படங்கள் வெளிவந்தன. ஜெமினி ஔவையார் படப் பாட்டுப் புத்தகம் முகப்புப்பக்கம் இதோ.



கே.பி. சுந்தராம்பாள்

எம்.கே.ராதா, கே.பி.சுந்தராம்பாள், ஜெமினிகணேசன், குசலகுமாரி, எல்.நாராயணராஜ், சச்சு, ஜி.பட்டு ஐயர், வனஜா, சுந்தரிபால், டி.வி.குமுதினி உட்பட பலர் நடித்த நீண்ட காலத் தயாரிப்பான 'ஔவையார்' திரைப்படம் **தெலுங்கு, கன்னடம், மலையாளம்** மொழிகளில் கதைச்சுருக்கத்துடன் வெளியிடப்பட்டது. ஔவையார் படத்தில் பணியாற்றியவர்கள் முழு விவரம் இதோ.



ஔவையார்
ஒரு ஜெமினி சித்திரம்
கதை, வசனம்:
கொத்தமங்கலம் சுப்பு, கி. ரா.
ஆராய்ச்சி:
ஜெமினி கதை இலாகா.
பாடல்கள்: ஔவையின் பாடல்கள் மற்றும்
பாபநாசம் சிவன், கொத்தமங்கலம் சுப்பு,
சங்கீதம் ... எம். டி. பார்த்தசாரதி,
அனந்தராமன், மாயவரம் வேணு.
நடனங்கள் ... கே. என். தண்டாயுதபாணி,
நடராஜ், ஜெயசங்கர். எம். ராமமூர்த்தி.
நாகசுரம்: இஞ்சிகுடி பிச்சைக்கண்ணு கோஷ்டி
ஆர்ட் டைரக்ஷன் ... ஏ. கே. சேகர்,
கே. ஆர். சர்மா, எம். எஸ். ஜானகிராம்
உதவி ... ஞானாயுதம், கவில் கோபால்
அரங்க அமைப்பு ... ... பி. ஆர். என். ஸ்வாமி
உதவி ... .. ஜி. ஆறுமுகம்
திரை ஓவியம் ... ... எம். சகாதேவன்
ஜி. எம். புஷ்பராஜ், பி. நாகராஜன்
சிற்பம் ... ... எம். நடேசன்
அரங்க அலங்காரம் ... என். தியாகராஜன்
உதவி ... என். ஜே. கன்னையா, சம்பந்தம்
ஆடை அலங்காரம் ... ... என். ஸ்ரீராமுலு
என். எஸ். பாலகிருஷ்ணன், டி. என். ராமமூர்த்தி
மேக் அப் ... ... சகாதேவராவ் தப்கிரே
உதவி பி. ராமகிருஷ்ணராவ், பி. ஸி. ஸி. பிள்ளை, யு. நரசிம்ம
ராவ், ஓய். வி. பலராம் நாயுடு, பி. எம். வேலாயுதம்
ஒளிப்பதிவு ... ... தம்பு.
உதவி ஸி. ஏ. எஸ். மணி, எம். எம். சர்மா, சசிதர் சென்
லைட்டிங் ... ... ஆர். கே. ஜெயராமன்.
ஸ்டில்ஸ் ... ... எஸ். வி. கோபால் ராவ்
ஒலிப்பதிவு ... ... ஸி. இ. பிக்ஸ்
உதவி எஸ். ஸி. காந்தி, கே. ஸி. சேகர், ஜி.சுந்தரராமன்
ரிகார்டிங் ... ... ஆர்.ஸி.ஏ. ஸவுண்ட் ஸிஸ்டம்
எடிட்டிங் ... ... என். கே. கோபால்
உதவி ... ஆர். கே. ராமச்சந்திரன், ஏ. பரமசிவம்
புரோஸஸிங் ... ... வி. ராமஸ்வாமி
உதவி ... ஆர். ரங்கஸ்வாமி; வி. சேதுராமன்
வி. சௌந்தரராஜன், கே. எத்திராஜ்
உதவி டைரக்ஷன் ... ஜி. எஸ். பிந்துமாதவன்
கன்டின்யுடி ... ... எஸ். வைத்யநாதன்
செயலாளர் ... ... வி. கோபாலகிருஷ்ண நாயுடு
டைரக்ஷன் ... ... கொத்தமங்கலம் சுப்பு
ஸ்டுடியோ: ஜெமினி
தயாரிப்பு: எஸ்.எஸ்.வாஸன்
ஆனந்த விகடன் பிரஸ், மதராஸ்

ஜெமினி எஸ்.எஸ்.வாசனும் - புதுமைப்பித்தனும்

புதுமைப்பித்தன் ஔவையார் பற்றி அழகுற எழுதித் தந்ததை தொ.மு.சி.ரகுநாதன் தனது புதுமைப்பித்தன் வரலாற்றில் தெரிவித்துள்ளார்.

க.ரத்னம்

18.8.2002 தினமணி கதிரில் பக்கம் 28, 29ல் **புதுமைப்பித்தன் சினிமாவுக்குப் போனது ஏன்?** *என்ற கட்டுரையை பேராசிரியர் க.ரத்னம் எழுதியிருந்தார்.*

25.8.2002

25.8.2002 தினமணி கதிரில் பக்கம் 28,29இல் **'இனி நீ உலகின் ஆச்சி'** *எந்தத் தொகுப்பிலும் வெளிவராத ஔவையார் படத்தின் கதை வசனப் பகுதியை 7 பக்கங்களில் புதுமைப்பித்தன் எழுதியதை பேராசிரியர் க.ரத்னம் தந்தார்.*

ஆ.இரா.வேங்கடாசலபதி

1.9.2002 தினமணி கதிரில் பக்கம் 28, 29இல் **'அரசால் மக்களைத் திருப்தி செய்ய முடியுமா?** *என்ற தலைப்பில் புதுமைப்பித்தன் ஆய்வாளரான ஆ.இரா.வேங்கடாசலபதி, அவர் வசமிருந்த புதுமைப்பித்தன் எழுதிய ஔவை கதைச் சுருக்கத்தைத் தந்தார். தொ.மு.சி, க.ரத்னம், ஆ.இரா.வேங்கடாசலபதி தந்த சில பகுதிகள் மட்டுமே புதுமைப்பித்தன் தீட்டிய 'ஔவையார்' பட வசனங்கள் நமக்குக் கிடைத்துள்ளன.*

காமவல்லி

20.3.1948 இல் வெளியான புராணத் திரைப்படம் காமவல்லி. இது பாங்கர் பிக்சர்ஸ் தயாரிப்பு. இயக்கம் மாணிக்கம். கதை **புதுமைப்பித்தன்** *– ராஜகோபால் பாகவதர், இசை சி.என். பாண்டுரங்கன், பாடல் பாபனாசம் சிவன், ஒளி டி.எஸ்.கோட்னி, டி.எல்.ரெட்டி, கலை டி.வி.எஸ்.சர்மா, எடிட்டிங் ஆம்.எம். வேணுகோபாலன், நடனம் வேதாந்தம் ராகவையா.*

திரைப்படத்தில் நடித்தவர்கள்

நாகர்கோவில் மஹாதேவன், எஸ்.வரலட்சுமி, டி.எஸ்.துரைராஜ், எல்.கிருஷ்ணவேணி, ராஜகோபால பாகவதர், டி.எஸ்.ஜெயா, வி.எம்.ஏழுமலை, அங்கமுத்து, சி.டி.கண்ணபிரான்.

காமவல்லி படம் திரைக்கு வருவதற்கு முன்பு வெளியான விளம்பரங்கள் மட்டும் பார்வைக்கு கிடைத்தது. இதோ அந்தப்பக்கங்கள்..

கைவசம் இருக்கும் படங்கள்.

அர்த்தநாரி—(P. U. சின்னப்பா, M. S. சரோஜா, M. V. ராஜம்மா, காளி N. ரத்னம், ராஜகாந்தம், T. R. ராம சந்திரன் நடித்தது.)

உத்தமி—(M. லக்ஷ்மணன், லக்ஷ்மி, M. R. சாமிநாதன், T. S. துரைராஜ், காளி N. ரத்னம், கிருஷ்ணவேணி நடித்தது.)

வேதாளபுரம்—(தமிழ் மாஜிக் படம்) இந்திரா ஆசார்யா, விமல குமார் முதலியோர் நடித்தது.

திலாவார்—பயங்கர ஹிந்தி ஸ்டண்டு படம்.

விரைவில் வெள்ளித்திரைக்கு எதிர்பாருங்கள்.

துளசிஜலந்தர்—P. U. சின்னப்பா, P. கண்ணாம்பா, சொக்கலிங்கம் சீனு முதலியோர் நடித்தது. (திருநெல்வேலி ஜில்லா)

காமவல்லி—நாகர்கோவில் மஹாதேவன், வரலக்ஷிமி, கிருஷ்ணவேணி நடித்தது.

பலமக்கை—பம்பாய் மோஹன் ஸ்டுடியோவில் தயாராகும் அதி உன்னத சித்திரம்.

? ?

Printed at the V. V. Press, Quilon.


வருகிறது!
நாகர்கோவில் K. மஹாதேவன்
கிருஷ்ணவேணி
வரலக்ஷ்மி
மற்றும் பலர் நடித்த
காமவல்லி
Ready For Booking
TRAVANCORE
Pankajavalli
Ardhanari
Uthami
Vedalapuram
Kamavalli
Malaimangai
Dilawar
TINNAVELLY
Pankajavalli
Thulasijalander
Vedalapuram
Kamavalli
Malaimangai
Dilawar
Apply to:—
INTERNATIONAL FILM CORPORATION,
FILM DISTRIBUTORS,
NAGERCOIL.
Thasor Press, Nagercoil.
வேதாளபுரம்
Great Tamil Magic Picture
பாஸ்கர்ஸ்
வேதாளபுரம்
Distributed by:-
INTERNATIONAL FILM CORPORATION.
FILM DISTRIBUTORS.
NAGERCOIL.

நாகர்கோவில் மஹாதேவன்

1938 இல் 'பூகைலாஸ்' படத்தின் மூலம், சினிமா நடிகரான நாகர்கோவில் மஹாதேவன் நயமான குரலுக்கும் நல்ல இசைக்கும் உத்திரவாதமாக விளங்கினார். நாகர்கோவில் 'ஒழுகினசேரியில் பிறந்தவர்'. இவர் நடித்த 15 படங்களின் பட்டியலை வாமனன் திரை இசைஅலைகள் நான்காம். பாகம் (சென்னை 2004) பக்கம் 192, 193 இல் தெரிவித்திருக்கிறார். ஆனால் ஏனோ காமவல்லி படம் பற்றி குறிப்பிடவில்லை. நாரதகான நாகர்கோவில் மகாதேவன் என்று ஏ.வி.மெய்யப்பச் செட்டியார் இவரைப் பற்றிக்குறிப்பிடுவார்.

அறந்தை நாராயணன்

புதுமைபித்தன் *கதை வசனம் எழுதிய காமவல்லி (1948) படத்திலும் கதாநாயகன் நாகர்கோவில் மகாதேவன் என்று அறந்தை நாராயணன் தினமணி கதிரில் 3.3.1985 நட்சத்திரத்தேடல்கள் 30வது பகுதியில் தெரிவித்திருக்கிறார்.*

டி.எஸ். கிருஷ்ணவேணி

நாடகமேடையிலிருந்து தமிழ் சினிமாவிற்கு கிடைத்த நடிகை டி.எஸ். கிருஷ்ணவேணி; அவர் காமவல்லியில் நடித்தார்.

எஸ்.வரலட்சுமி

1937 முதல் பல்லாண்டு காலம் திரையுலகில் பிரகாசித்தவர் எஸ்.வரலட்சுமி.

காமவல்லியில் கதாநாயகி

எழுத்தாளர் புதுமைப்பித்தன கதை வசனம் எழுதிய 'காமவல்லி' படத்தில் காமவல்லியாக நடித்தவர் எஸ்.வரலட்சுமி. (அறந்தை நாராயணன், நட்சத்திரத் தேடல்கள் 75, தினமணி கதிர் கட்டுரை)

வாமனன்

'திரை இசை அலைகள்' எனும் நூலினை வாமனன் பல பாகங்களாகத் தந்துள்ளார். அதில் இரண்டாம் பாகம் (சென்னை 2001) பக்கம் 98 முதல் 129 வரை. எஸ்.வரலட்சுமி பற்றி எழுதியுள்ளார். ஆனால் அவர் 1946 இல் நடித்து, புதுமைப்பித்தன் வசனம் எழுதிய காமவல்லி படம் பற்றிய குறிப்பு ஏதும் தரவில்லை.

ராஜமுக்தி

1948 இல் வெளிவந்த *36* தமிழ்த்திரைப் படங்களில் ராஜமுக்தியும் அடங்கும். இப்படத்திற்கு வசனம் புதுமைப்பித்தன் மற்றும் நாஞ்சில்நாடு டி.என்.ராஜப்பா. ராஜமுக்தி திரைப்படத்தின் பாடப்புத்தகம், கதைச் சுருக்கம், நடிப்பு, தயாரிப்பு விவரங்கள் இதோ.

நடிகர்கள் :

M. K. தியாகராஜ பாகவதர்	...	ராஜேந்திர வர்மன்
செருகளத்தூர் சாமா	...	சாது : விஷ்ணு
M. G. ராமச்சந்திரன்	...	மகேந்திர வர்மன்
M. R. சாமிநாதன்	...	ராஜகுரு ஸ்ரீதத்தன்
P. G. வெங்கடேசன்	...	ஹனுமான் சிற்பி
M. G. சக்ரபாணி	...	வைஜயந்தி மந்திரி
P. S. வீரப்பா	...	சேனாபதி அமரசிம்மன்
ஸ்ரீனிவாஸ ராவ்	...	பெருமாள்
K. சகாதேவன்	...	ஜங்கமன் ; சிவன்
S. M. திருப்பதி	...	மகேந்திரபுரி மந்திரி
கோபால் ஸ்வாமி	...	மகேந்திரபுரி சேனாபதி

நடிகைகள் :

P. பானுமதி	...	கன்னிகா
V. N. ஜானகி	...	ராணி மிருணாளினி
C. T. ராஜகாந்தம்	...	ரஜனி
P. R. சந்திரா	...	சொக்கி
பேபி ராஜாமணி	...	நரேந்திரன்

நாதஸ்வர சங்கீதம் :

அகில இந்திய நாதஸ்வர சக்ரவர்த்தி

திருவாடுதுறை ஸ்ரீ. T. N. ராஜரத்தினம் பிள்ளை

கதை, ஸினரியோ	...	**ராஜா சந்திரசேகர்**
வசனம்	...	புதுமைப்பித்தன் & நாஞ்சில் நாடு T. N. ராஜப்பா
பாடல்கள்	...	பாபநாசம் சிவன்
பாடல்கள் சிக்ஷை	...	ஆலத்தூர் சுப்ரமணியம்
சங்கீத டைரக்ஷன்	...	C. R. சுப்பராம்
பின்னணி சங்கீதம்	...	சுப்பராம் ஆர்கெஸ்ட்ரா
நடன சிக்ஷை	...	வேதாந்தம் ராகவய்யா
போட்டோகிராபி	...	பாண்டுரங்க நாயக் ஸுரேந்திரா K. பாய்
ரிகார்டிங்	...	மீரா ஸாகேப்
ஸெட்டிங்	...	வாஸுதேவ் ஸடோலிகர்
லபரேடரி	...	V. V. குல்கர்னி கார்கானிஸ்
எடிட்டிங்	...	M. D. ஜாதவ்

ஸ்டுடியோ :

பிரபாத் — பூனா

டைரக்ஷன் :

ராஜா சந்திர சேகர்

"ராஜமுக்தி"

(கதாசாரம்)

வைஜயந்தி மன்னன் ராஜேந்திர வர்மன், தன் வமச விரோதியான மகேந்திர வர்மனோடு ஆறு வருடமாக தொடர்ந்து போரிடுகிறான். அவன் மனைவி மிருணாளினி கணவன் வெற்றியுடன் சீக்கிரம் திரும்ப வேண்டுமென்று திருமாலை துதிக்கிறாள். மந்திரியும் ராஜகுருவும் மன்னன் வராமலிருக்க போர் நீடிக்க வேண்டுமென்று எண்ணு கிறார்கள். ஆனால் வேந்தன் வெற்றியுடன் சேனாபதி அமரசிம்மனோடு நாட்டிற்கு வருகிறான். வரவேற்பின் போது மந்திரியின் தங்கை கன்னிகா சேனாபதியிடம் உள்ளத்தை பறிகொடுக்கிறாள். தனிமையில் காதல் பிச்சை கேட்டு மறுக்கப்படுகிறாள். இதை அறிந்த மந்திரி தங்கையின் அசட்டுத்தனத்தை இடித்துக் காட்டி, மன் னனை மயக்கி ஓர் மைந்தனை பெற்று விட்டால் "மகுடம் உனக்கு, மகாராணி நீ" என்று தூபமிடுகிறான்.

கன்னிகா உளளம கலந்து தன் காதலை மன்னர் பக்கம் திருப்புகிறாள். சந்தர்ப்பம் வாய்க்கிறது. ஒரு நாள் இரவு உப்பரிகையில் வேந்தன் தனியே இருப்பதை அறிந்து, கனி வர்க்கங்களை எடுத்துக்கொண்டு கன்னிகா அங்கு செல்ல இருவருக்கும் உரையாடல் நடக்கிறது. அவளுடைய சிற்றின்பம் பற்றிய கேள்விகளுக்கு, வேந் தன் பேரின்பப் பொருளில் விடை கொடுத்தவாறே பழத்தை புசித்து தோலை வெளியே எறிகிறார். எதிர்பாரா மல் அங்கு வந்த ஒரு முதியவர், எறியப்பட்ட தோல்களை எடுத்துத் தின்று பசியாறுகிறார். அந்தப்புரத்தருகில் அன்னியனைக் கண்ட, ரஜனி என்ற பணிப் பெண், கூச்ச லிடவே காவலர்களால் முதியவர் பிடிபட்டு, கசையால் அடிபடுகிறார். அவர்கள் அடிக்க அடிக்க அவர் சிரிக் கிறார். சிரிப்பின் எதிரொலி அரண்மனையை கலக்குகிறது.

2

அடியோசை கேட்ட அரசன் திடுக்கிட்டு வந்து பார்க்க, சாதுவென்றறிந்து அடிப்பதை தடுத்து, அடுத்த நாள் தர்பாருக்கு அழைத்து வரும்படி ஆக்ஞையிடுகிறான்.

இந்த சம்பவத்தால் இரவில் மன அமைதியின்றி அரசன் தனித்திருக்கும்போது, கன்னிகா, பிரவேசித்து காமவலை வீசுகிறாள். மிருணாளினியின் எதிர்பாராத வருகையால் அரசர் அவள் வலையில் சிக்காமல் தப்புகிறார். மறுநாள் விசாரணையில், சாதுவின் ஞான மொழிகளால், மன்னன், மனம் மாறி, பொக்கிஷத்திலுள்ள பொருளையெல்லாம் தானதர்மம் செய்து, கர்ப்பம் தரித்திருக்கும் தன் மனைவியையும் பிரிந்து, பண்டரிபுரம் சென்று, பாண்டுரங்கன் அருள் பெற்று துறவியாகி ஊரூராய் சுற்றி உபதேசம் செய்து வருகிறார்.

அரண்மனையில், மந்திரியின் மண்ணாசை, ராஜகுருவின் பெண்ணாசை, கன்னிகாவின் காமச்சேட்டை, யாவும் வெளியாகவே, மூவரையும் உடனே வெளியேறும்படி சேனாபதி கர்ஜிக்கிறான். ராஜகுரு தந்திரத்தால் தப்புகிறான். அண்ணனும் தங்கையும் அப்போதே புறப்பட்டு, பகையரசன் மகேந்திரனை தஞ்சமடைகின்றனர். அவன் கன்னிகாவை மணந்து, மைத்துனனை மந்திரியாக்குகிறான்.

ஊர் சுற்றி வந்த துறவி ராஜேந்திரன் தற்செயலாய மகேந்திரன் நாட்டிற்கு வருகிறான். பட்டத்தரசி கன்னிகா அண்ணன் உதவியால் துறவியை அரண்மனைக்கு அழைத்து உபசரிக்கிறாள். விதி தாண்டவமாடுகிறது. கன்னிகா மலைமேலிருந்து உருட்டப்படுகிறாள். மந்திரி பாதாளச் சிறையில் தள்ளப்படுகிறான். துறவி உயிரோடு கல்லறையில் புதைக்கப்படுகிறார். காரணம் என்ன? முடிவு என்ன? கர்ப்பிணி மிருணாளினியின் கதியென்ன என்பதை திரையில் கண்டு ஆனந்தியுங்கள்.

எம்.கே. தியாகராஜ பாகவதர்

எம்.கே. தியாகராஜ பாகவதர் நடித்து வெளிவந்த மொத்தப்படங்கள் 14. ஹரிதாஸ், . அசோக்குமார், சிந்தாமணி அல்லது பில்வமங்கள், அமரகவி, திருநீலகண்டர், சத்தியசீலன் அல்லது தந்தை சொல் மறவாத தனயன், சிவகவி, ராஜமுக்தி, பவளக்கொடி, நவீன சாரங்கதாரா, அம்பிகாவதி, சியாமளா, புதுவாழ்வு, சிவகாமி.

திருச்சி தியாகராஜாபிலிம்ஸ்

சத்தியசீலன், திருநீலகண்டர் ஆகிய படங்களை 'தியாகராஜா பிலிம்ஸ்' என்ற தயாரிப்பில் வெளியிட்ட பாகவதர் 'புதுமைப்பித்தன் வசனம் எழுதிய 'ராஜமுக்தி' படத்தைத் தயாரிக்கும் போது புதிய பெயரைச் சூட்டினார்.

நரேந்திரா பிக்சர்ஸ்

'இலட்சுமி காந்தன் கொலை வழக்கின்' போது சிறையிலேயே பாகவதர் தெலுங்கு, இந்தி, உருது மொழிகளைக் கற்றார். வீரத்துறவி விவேகானந்தரது வரலாற்றையும், அவரது படைப்புகளையும் படித்தறிந்தார் பாகவதர்.

விவேகானந்தர்

சுவாமி விவேகானந்தரின் இயற்பெயரான 'நரேந்திரன்' என்ற பெயரில் நரேந்திரா பிக்சர்ஸ் பெயரில் இராஜமுக்தியைத் தயார் செய்தார்.

பூனாவில்

தமிழ்ப்படத் தயாரிப்பாளர்களிடம் அவருக்கு ஏற்பட்ட அவநம்பிக்கையாலும், படப்பிடிப்பு கூடங்களைவிட்டு, வெளிப்புறக்காட்சிகளை எடுப்பதற்கு பாகவதர் சென்றால் கூடுகின்ற மக்கள் கூட்டத்தைத் தவிர்ப்பதற்கும் அமைதியான சூழ்நிலையில் பூனாவில் தமது படத்தை எடுத்திட முடிவுசெய்தார் பாகவதர்.

டி.என்.ராஜரத்தினம் பிள்ளை - மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.

பூனாவில் சிவாஜி நகரில் ஒரு மாளிகையை வாடகைக்கு எடுத்துக் கொண்டார். செருகளத்தூர் சாமா, டி.எஸ். ராஜரத்தினம் பிள்ளை, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். பி.எஸ்.

வீரப்பா, எம்.ஜி.சக்கரபாணி, வி.என்.ஜானகி, பி.பானுமதி, சி.டி.ராஜகாந்தம் ஆகியோர் 'ராஜமுக்தி' படத்தில் பாகவதருடன் நடிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கதை வசனம் புதுமைப்பித்தன். (எம்.கே.தியாகராஜபாகவதர் கலை உலகில் மங்காத ஒளி படைத்த மாபெரும் நட்சத்திரம், இரா.செழியன், சென்னை, 2010, பக்கம் 65, 66)

விந்தன்

எம்.கே.டி. பாகவதர் கதை நூலில் சென்னை, 1983, பக்கம் 246 இல் **ராஜமுக்தி படத்தின் திரைக்கதை வசனத்தை அமைத்துத் தந்தவர் திரு. புதுமைப்பித்தன் என்று குறிப்பிட்டுள்ளார். இதில் பாகவதருக்கு ஜோடியாக நடித்தவர் பி.பானுமதி என்கிறார் இது தவறு. பாகவதருக்கு ஜோடியாக நடித்தவர் வி.என்.ஜானகி.**

மாலதி பாலன்

விகடன் பிரசுரம் வெளியிட்ட மாலதிபாலன் எழுதிய ஏழிசை மன்னர் எம்.கே.டி. பாகவதர் நூலில் சென்னை 2010 பக்கம் 113 இல் சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன் வசனம் **எழுதிய ஒரே படம்** *ராஜமுக்தி என்று தவறுதலாகக் குறிப்பிட்டுள்ளார்.*

ஜெ. ராம்கி

'பாகவதர்' என்ற நூலை ஜெ.ராம்கி 2007 இல் வெளியிட்டுள்ளார். அதில் பக்கம் 130, 131 இல் ராஜமுக்தி படத்தை எடுத்து முடிப்பதற்கும் பாகவதருக்கு நிறைய சிரமங்கள். ஏகப்பட்ட குறுக்கீடுகள். படத்தோடு சம்பந்தப்பட்ட கலைஞர்களுக்கு இந்தி தெரியாது. படத்தின் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கோ தமிழ் தெரியாது. இரு தரப்பிற்கும் பாஷை தெரியாமல் ஏகப்பட்ட குழப்பங்கள்.

படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தபோதுதான் டெல்லியில் மகாத்மாகாந்தி படுகொலை செய்யப்பட்டார். கொலையாளி கோட்சே புனேயைச் சேர்ந்தவர் என்பதால் நகரத்தில் கலவரம் மூண்டது. பல வாரங்ககள் யாரும் ஸ்டூடியோவைவிட்டு வெளியே செல்லமுடியவில்லை. இடையில் படத்தின் வசனகர்த்தாவான புதுமைப்பித்தனுக்கு காசநோய் முற்றியது. மூச்சுவிடவே சிரமப்பட்ட புதுமைப்பித்தனை அவர் குடும்பம் வசித்து வந்த திருவனந்தபுரத்துக்கு ரயிலில் அனுப்பிவைத்தார்கள்.

புதுமைப்பித்தன் வசனம் எழுதிய முதலும் கடைசியுமான படம் இதுதான். **இதுவும் தவறான தகவல்** புதுமைப்பித்தன் காமவல்லி படத்திற்கும் வசனம் எழுதியதை நாம் ஏற்கனவே பார்த்துள்ளோம்.

எஸ்.எம்.உமர்

பாகவதரின் பத்தாவது படம் ராஜமுக்தி. இந்தப்படத்தில் எந்தப் பெண்ணையும் தொடாமலேயே நடித்தார் (முன் வந்த படங்களில் பெண்களை அணைத்து நடித்தார்). முன் வந்த படங்களைப் போல ராஜமுக்தி வெற்றிபெறவில்லை. கலைமாமணி (எஸ்.எம்.உமர், கலை உலக சக்ரவர்த்திகள் பாகம் 1, சென்னை 2012, பக்கம் 58)

தமிழ்ச் சினிமாவின் கதை

சிறை மீண்ட பின் வெளிவந்த ராஜமுக்தி படம் மட்டுமல்ல. பின்னர் வெளிவந்த பாகவதரின் எந்தப் படமும் வெற்றிபெறவேயில்லை. (அறந்தை நாராயணன், தமிழ் சினிமாவின் கதை, பக்கம் 303)

நட்சத்திர உலகம்

ஆறு அணா விலையில் ஜனவரி 50 இல் வெளிவந்த சினிமாப் பத்திரிகை 'நட்சத்திர உலகம்' 48 பக்கங்கள். (மலர் 1, இதழ் 2) ஆசிரியர் வி.ஆர். சந்தானம் அதில் பக்கம் 8 இதோ.

பானுமதி

ராஜமுக்தி - இந்தப் படத்தில் கன்னிகாவாகத் தோன்றி **புதுமைப்பித்தனின் அழகான வசனங்களை அழகாகப் பேசி நடித்தார்** பானுமதி என்று வந்துள்ளது. (பானுமதியின் திரைப்படக் காதலர்கள் கட்டுரை).

புதுமைப்பித்தனது ராஜமுக்தி பட வசனங்கள் அழகானவை என்று அப்போதைய சினிமா இதழ்கள் போற்றியுள்ளன.

புதுமைப்பித்தனின் ஔவையார் கதை வசனம் பயன்படுத்தப்படவில்லை. காமவல்லி, ராஜமுக்தி படங்கள் திரைக்கு வந்தன.

சிற்றன்னை - உதிரிப்பூக்கள்

1949 ஏப்ரல் மே 'காதம்பரி' இதழில் வெளிவந்தது புதுமைப்பித்தன் எழுதிய சிற்றன்னை நாவல்.

சரஸ்வதி பிரசுரம்

சென்னையிலிருந்து வெளிவந்த சரஸ்வதி பிரசுரம் சிற்றன்னை நாவலை பவுன் பரிசு நாவல் 3 வதாக செப்டம்பர் 30, 1950 இல் வெளியிட்டது. முதல் பவுன் நாவல் '**காமபானம்**'; *இரண்டாவது பவுன் நாவல்* '**நிராசை**'.

1979 - டிம்பிள் கிரியேஷன்ஸ்

88 பக்கங்கள் 1 ரூ எட்டணா விலையில் 1950 இல் வெளிவந்த சிற்றன்னை, 'உதிரிப்பூக்கள்' திரைப்படத்தின் மூலக்கதையாயிற்று. 99 தமிழ்த் திரைப்படங்கள் வெளிவந்த 1979 இல் டிம்பிள் கிரியேஷன்ஸின் தயாரிப்பில் வெளிவந்த திரைப்படம் '**உதிரிப்பூக்கள்**' *ஆகும். இதன் மூலக்கதை புதுமைப்பித்தனின்* '**சிற்றன்னை**' *ஆகும்.*

பர்வதகுமாரி புரொடக்ஷன்ஸ்

புதுமைப்பித்தனது தாயார் பர்வதத்தம்மாள், புதுமைப்பித்தனது மகள் தினகரியின் மற்றொரு பெயர் பர்வதகுமாரி. தனது தாயாரின் பெயரில், மகளின் பெயரில் புதுமைப்பித்தன் துவங்கிய சினிமா கம்பெனி பர்வதகுமாரி புரொடக்ஷன்ஸ்.

குற்றாலக்குறவஞ்சி

திரிகூடராசப்பக்கவிராயரின் குற்றாலக் குறவஞ்சி கதையை '**வசந்தவல்லி**' *என்ற பெயரில் படமாக்க முடிவெடுத்தார் புதுமைப்பித்தன். பணம் ஏது? இரயிலுக்கு போக 100 ரூபாய் கடன் வாங்கி, 75 ரூபாய் டிக்கெட்டில் பிரயாணம் செய்தார் பட முதலாளி புதுமைப்பித்தன். படத்தில் நடிப்பதற்கு நாகர்கோவில் மகாதேவனுக்கு அட்வான்ஸ் கொடுத்தது ஒரு ரூபாய்.* **பர்வதகுமாரி புரொடக்ஷன்ஸ்** *பகற்கனவாகவே புதுமைப்பித்தனுக்கு ஆயிற்று.*

இளையபாரதி - வண்ணதாசன்

இளையபாரதி சாந்திபிரசுரம் வெளியீடாக டிசம்பர் 1994 இல் சென்னையிலிருந்து அறுபது ரூபாய் விலையில் 186

பக்கங்களில் வெளிவந்த நூல் **கண்மணி கமலாவுக்கு..** *(இந்த நூலை அடியேனுக்கு தந்து உதவியவர் எனது பாசத்திற்குரிய அண்ணன் சாகித்ய அகாதெமி விருதுபெற்ற வண்ணதாசன்)*

31.8.1946 - பி.எஸ்.ராமையா

அந்த நூலில் 62 வது கடிதம்; **எனது ஆருயிர்க் கண்ணாளுக்கு** *என்று புதுமைப்பித்தன் துவங்கும் கடிதம். அதில் பக்கம் 152இல் புதுமைப்பித்தன் எழுதுகிறார்* **ராமையா** *நமக்கு நண்பர் எனறு சொல்லிக் கடைசியில் நமக்குப் போட்டியாகப் போய்விட்டார்.*

கிருஷ்ண துலாபாரம்

கிருஷ்ண துலாபாரம் என்று ஒரு படம் குறிப்பிட்டிருந்தேனே, அதை என்னுடைய காமவல்லி படம் தயார் செய்கிறவர்கள் எடுக்க உத்தேசித்திருந்தார்கள். அவர்கள் தெலுங்கு பட முதலாளிகள். அவருடைய (பி.எஸ். ராமையா) தன அமராவதி என்ற படத்தை அங்கேதான் பிடிக்கிறார்கள்.

காமவல்லி வசனத்தை அவர் ஒரு தடவை போய் கேட்டுவிட்டு பிரமித்துப் போனாராம். என்னுடைய வசனம் ரொம்ப நன்றாக இருக்கிறது என்பதை அவர் தெரிந்து கொள்ள முடிந்தது. என்னை அங்கே கவி என்று மரியாதையாகச் சொல்லுவதையும், நான் ஸ்டுடியோவுக்குப் போகாமல் என் அந்தஸ்து வளருவதையும் கண்டு பொறாமைப்படுகிறார். அது மட்டுடன் நில்லாமல், கிருஷ்ண துலாபாரத்தையும் எனக்குப் புராணக்கதைகள் எழுதத் தெரியாது. சரித்திரக் கதைகள் தான் எழுதத் தெரியும் என்று சொல்லிக் காக்காய் பிடித்து தனக்கு வாங்கிக் கொண்டார். காரணம் முதலாளி சம்மதித்ததற்கு நான் ரூ.7000 மும் நிபந்தனைகளும் போட்டதும், அவர் அதற்கு குறைந்த தொகைக்கு ஒப்புக் கொண்டதுமேயாகும்.

புதுமைப்பித்தனும் - பி.எஸ்.ராமைவும்

1905 மார்ச் 24 இல் வத்தலக்குண்டில் பிறந்தவர். 1933 செப்டம்பரில் மணிக்கொடியில் சேர்ந்து 1935 இல் மணிக்கொடி நின்று போன பிறகு 1935 மார்ச் 3 இல் மணிக்கொடியை தனது பொறுப்பில் ஏற்று 'சிறுகதை' மணிக்கொடியாக நடத்தியவர் பி.எஸ்.ராமையா. (1938 இல் பத்திரிகை நின்று போனது. 1983 இல் அவர் மறைந்தார்)

புதுமைப்பித்தன் தனது *31.8.1946* கடிதத்தில் குறிப்பிட்டபடி கிருஷ்ண துலாபாரம் படத்தில் பி.எஸ்.ராமையாவிற்கு எந்தத் தொடர்பும் இல்லை. இதோ அதற்கான சான்று.


SRINIVAS CINETONE
Presents
Krishna Thulabaram

Direction	...	Mr. A. NARAYANAN
Dialogues	...	Mr. T. C. V. NAICKER
Songs	...	T. M. VEDAMANICKAM
Photography	...	T. V. KRISHNIAH
Audiography	...	Mrs. A. NARAYANAN
Processed	...	T. V. RANGIAH
Edited	...	N. K GOPAL
Art Direction	...	APPUKUTTY KURUP & A. BALAKRISHNA KURUP

Musical Director: S. N. R. NATHEM
,, *Score by*: GOVINDARAJ NAIDU-Hormoni
D. RAJA-Fiddle
D. S. MANI-Bull Bull Tharang
GOVINDASAMY CHETTY-Tabl

நடிகர்கள்

பி.எஸ்.ராமையாவின் திருமணம்

பி. எஸ். ராமையா 1937 இல் திருமணம் செய்ய முடிவெடுத்தார். உடனே 'புதுமைப்பித்தனின் துணைவியார் கமலா விருத்தாசலம் **பூப்போட்டுப் பார்ப்போம். திருமணத்துக்கு அனுமதி கிடைத்துவிட்டால் அதையே** நீங்கள் எல்லோருக்கும் எழுதிவிடலாம்' என்றார்.

புதுமைப்பித்தன் உற்சாகத்துடன் பூப்போட்டுப் பார்க்க முன்வந்தார். அவருக்கு அது ஒரு வேடிக்கையாக இருந்தது. சோதனை போல் அன்று அங்கு பூவே இல்லை. அதனால் வெள்ளைக்கும் சிவப்புக்குமான திருநீரையும், குங்குமத்தையும் பொட்டலங்களில் கட்டி கி.ராமச்சந்திரன் அவற்றை தெய்வப்படத்தின் அடியில் போட்டார்.

கமலாதான் ஒன்றை எடுத்து நீட்டினார். புதுமைப்பித்தன், **"நான் தான் பிரித்துப் பார்க்க வேண்டும்"** என்று சொல்லி அதை வாங்கிப் பிரித்தார். குங்குமம். கி.ராமச்சந்திரன் சிவப்பு வந்துவிட்டது. தெய்வ சம்மதம் இல்லை என்றார். கமலா விருத்தாசலம், எங்க பக்கத்திலெல்லாம் சிவப்பு வந்தால் தான் நல்லது, அனுகூலம் என்று சொல்வேன் என்றார்.

நானும் சிவப்பு கட்சி

விருத்தாசலம் (புதுமைப்பித்தன்) நானும் சிவப்பு கட்சிதான். கடவுள் கை காட்டிவிட்டார். நீங்கள் நேரே போய் அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு விடலாம் என்று என்னிடம் சொல்லிச் சிரித்தார் (பி.எஸ்.ராமையா, மணிக்கொடி காலம் 1982 இல் சாகித்ய அகாதெமி விருதுபெற்ற நூல், சென்னை, பக்கம் 324)

1937 இல் திருமதி சரஸ்வதியை திருமணம் செய்து கொண்டார் பி.எஸ்.ராமையா. மேற்சொன்ன நிகழ்வு புதுமைப்பித்தனும் பி.எஸ். ராமையாவும் எந்த அளவு நட்பாக இருந்தார்கள் என்பதை நமக்குக் காட்டுகிறது.

ஆனால் சினிமாத்துறையில் புதுமைப்பித்தனுக்கு வந்த வாய்ப்பைத் தட்டிப் பறித்தார் பி.எஸ்.ராமையா என்ற புதுமைப்பித்தனது 31.8.1946 கடிதத்தில் குறிப்பிட்டதில் உண்மை இல்லாமல் இல்லை.

தன அமராவதி படத்தில் கதை, டைரக்ஷன் பி.எஸ். ராமையா என்ற அளவிற்கு வளர்ந்திருந்தார். இதோ அதற்கான சான்றுகள்.



(பூலோக ரம்பை – வசனம் – மதனகாமராஜன், குபேரகுசேலா கதை வசனம் பரஞ்சோதி, வசனம் இயக்கம், அர்த்தநாரி வசனம், தன அமராவதி கதை டைரக்ஷன், விசித்திர வனிதா – திரைக்கதை. இவை பி.எஸ்.ராமையா பணியாற்றிய திரைப்படங்கள் ஆகும்.)

புதுமைப்பித்தனும் கு.ப.ராஜகோபாலனும்

மணிக்கொடி காலத்தில் தனக்கென ஒரு பாணியை உருவாக்கியவர் கு.ப.ராஜகோபாலன்.

கு.ப.ரா

கு.ப.ராஜகோபாலன் (கு.ப.ரா) 1902ல் பிறந்தவர். அவர் ஊர் தஞ்சை ஜில்லாவில் உள்ள கும்பகோணம். திருச்சியை சேர்ந்த கொண்டையம்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் பத்தாவது படித்து, திருச்சி நேஷனல் காலேஜில் இண்டர்மீடியட் படித்து, பிறகு கும்பகோணம் அரசாங்க கல்லூரியில் பி.ஏ. படித்து பட்டம் பெற்றார். அப்போதே கு.ப.ரா. இங்கிலீஷில் கவிதைகள் எழுதுவதுண்டு.

சுதந்திரச்சங்கு

1925ல் கு.ப.ரா.வுக்கு திருமணம் ஆயிற்று. பிறகு மேலூரில் தாலுகா ஆபிசில் நாலைந்து வருஷம் வேலைபார்த்தார். கண்களில் காட்ராக்ட் வந்துவிடவே, வேறு வழியின்றி வேலையை ராஜினாமா செய்ய ஏற்பட்டது. கும்பகோணத்தில் இருந்த வந்த சமயம் 'மணிக்கொடி' தொடர்பு ஏற்பட்டது. அதிலும் 'சுதந்திரச்சங்கு'விலும் எழுதிவந்தார். பிறகு 'கலைமகள்'ல் எழுதிவந்தார்.

அதன்பிறகு சென்னையில் வ.ரா. ஆசிரியராக இருந்த 'தமிழ்நாடு' 'பாரததேவி' இரண்டிலும் சில மாதங்கள் வேலைபார்த்து விட்டு பிறகு கா.சி. வெங்கடரமணி நடத்திய 'பாரதமணி'யிலும் சில மாதங்கள் பணி செய்தார். அதுக்குப் பிறகு, திருச்சியில் 'கிராம ஊழியன்' பத்திரிகை ஆசிரியராக இருந்தார். அப்போது கும்பகோணத்தில் இருந்து வருகையில் 1944ல் (24–4–1944) 'காங்கெரின்' என்ற வியாதி வந்து நாற்பத்தி இரண்டாவது வயதில் காலமானார்.

கு.ப.ரா. மறைந்தபோது புதுமைப்பித்தன் 'ஓடாதீர்' என்று ஒரு கவிதை தீட்டினார்.

ஓடாதீர்

1

ஓகோ, உலகத்தீர்,
ஓடாதீர்!
சாகா வரம் பெற்ற,
சரஸ்வதியார் அருள்பெற்ற
வன்னக் கவிராயன்
நானல்ல.
உன்னிப்பாய் கேளுங்கள்,
ஓடாதீர்!
வானக் கனவுகளை
வக்கணையாச் சொல்லும்
உண்மைக் கவிராயன்
நானல்ல.
சத்தியமாய்ச் சொல்லுகிறேன்;
சரஸ்வதியார் நாவினிலே
வந்து நடம்புரியும்
வளமை கிடையாது!

2

உம்மைப்போல் நானும்
ஒருவன் காண்;
உம்மைப்போல் நானும்
ஊக்கம் குறையாமல்
பொய்கள் புனைந்திடுவேன்
புளுகுகளைக் கொண்டும்மை
கட்டி வைத்துக்
காசை, ஏமாந்தால்,–
கறந்திடுவேன்.
ஊருக்கு மேற்கே
ஊருணியில் கண்டவளை
ஆருக்கும் வாய்க்கா
அரம்பை என்று,
கனவென்று,
சொல்லில் வனைந்திடுவேன்;
சோற்றுக்கு அலைக்காதீர்.
"கன்னி எழில் வேண்டாம்;
காதல் கதை வேண்டாம்;
சொன்னபடி, தேச
பக்தி எழுப்பிடுவாய்,"–
என்றக்கால்
"அப்படியே, ஆஹா
அடியேன் இதோ" என்று
கல்லும் உயிர் பெற்று
காலன் போல், நடமாட,
"வெல்லு, வெல்லு" என்றும்
குத்தும்
வீறாப்புத்தார்க்குச்சி
எத்தனை வேணும்? செய்து
இணையடியில்
வைத்திடுவேன்.

3

சற்று, பொறும் ஐயா
சங்கதியைச் சொல்லுகிறேன்;
இன்றைக்குக் காசு
இருக்கிறது; இனிமேலே
என்றைக்கோ, எப்போதோ
எதிரில் எனைக்கண்டால்
ஓடி ஒளியாதீர்!
உம்மிடம் நான்
கேட்கவில்லை.

4

இத்தனைக்கும் மேலே
இனி ஒன்று; ஐயா, நான்
செத்ததற்குப் பின்னால்
நிதிகள் திரட்டாதீர்!
நினைவை விளிம்புகட்டி,
கல்லில் வடித்து
வையாதீர்;

''வானத்து அமரன்
வந்தான் காண! வந்தது போல்
போனான்காண்'' என்று
புலம்பாதீர்!
அத்தனையும் வேண்டாம்.
அடியேனை விட்டு விடும்.

5

சித்தே பசியாற
செல்லரிக்கும் நெஞ்சாற
மெத்தப் பழங்கதைக்கு
மெத்தப் பழங்கதையை
புத்திதடுமாறிப்
புகன்றாலும்,
அத்தனையும், ஐயோ,–
அவையாவும் லட்சியங்கள்!
வானத்துக் கற்பனைகள்!
வையம் வளர்க்க வந்த
மோகன மந்திரங்கள்!
மோட்சவழிகாட்டிகள், ஓய்!
அத்தனையும் உங்கள்
அறிவை வளர்க்க வந்த
சொத்துக்கள் ஓய்!...

சொல்லுக்குச் சோர்வேது
சோகக்கதை என்றால்
சோடி ரெண்டு ரூபா!
காதல் கதை என்றால்
கை நிறையத் தரவேணும்!
ஆசாரக் கதை என்றால்
ஆளுக்கு ஏற்றதுபோல்;
பேரம் குறையாது
பேச்சுக்கு மாறில்லை.
ஆசை வைத்துப் பேசி எமை
ஆட்டி வைக்க முடியாது!
காசைவையும் கீழே,– பின்
கனவுதமை வாங்கும்,–
இந்தா!... இது
காலத்தால் சாகாது,
காலத்தின்
ஏலத்தால் மலியாது!
ஏங்கானும் ஓடுகிறீர்!
ஓடாதீர்!
உம்மைப்போல் நானும்
ஒருவன் காண்!
ஓடாதீர்!

1960 ஆகஸ்டில் மலேயாவில் வெளியிடப்பட்ட புதுமைப்பித்தன் நினைவு மலரில் திருமதி. கமலா விருத்தாசலம்– புதுமைப்பித்தன் துணைவியார் கூறுகிறார்:–

''**இலக்கியப் பணி ஒன்றையே நம்பி, வாழ்க்கை நடத்துவது கஷ்டம் என்பதை நிரூபித்தவர்கள், கு.ப.ராவும் புதுமைப்பித்தனும்தான்;** பதினைந்து ஆண்டுகள் எழுத்திலேயே கழித்துத் தீராத நோயையும் மாறாத வறுமையையும்தான் சம்பாதித்தார் புதுமைப்பித்தன். இலக்கியம் பணக்காரர்களின் போக்கு; அதை ஒருவன் தொழிலாகக் கொண்டால் அது அவனைக் கொன்றுவிடும் என்று இவர் சொல்வதுண்டு; இலக்கியமே இவரைக் கொன்று தீர்த்தது; அவர் மனம் வஜ்ரம் பாய்ந்தது; துன்பங்கள் கரை தட்டிப் புரண்டாலும் சிறிதளவுகூட

வெளியில் காட்டிக் கொள்ளமாட்டார். ஊகிக்க முடியாத துன்பத்தில்கூடச் சிரிப்பைத்தான் அவரிடம் காண முடியும். (கரிச்சான் குஞ்சு கு.ப.ரா., சென்னை 1990, பக்கம் 19)

புதுமைப்பித்தன் எழுதிய முதல் பாட்டு

'ஓடாதீர்' பாடல் 1944-ம் ஆண்டில் 'கிராம ஊழியன்' ஆண்டு மலரில் வெளிவந்தது. வேளூர். வே.கந்தசாமிப்பிள்ளை என்ற புனைப்பெயரில் 'புதுமைப்பித்தன்' எழுதிய முதல் பாட்டு இதுதான். இந்தப்பாடல் வெளி வருவதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் தான் கு.ப. ராஜகோபாலன் காலமானார். அவர் இறந்த பின்னர் அவரது குடும்பத்துக்குத் தமிழ்நாடு சகாயநிதி திரட்ட முன்வந்தது. தமிழர்களின் இந்த 'தாராள மனப்பான்மை' கொண்ட நன்றியறிதலைக் கண்டெழுந்த வயிற்றெரிச்சலைத்தான்,

ஐயா, நான்
செத்ததற்குப் பின்னால்
நிதி திரட்டாதீர்!

என்ற புதுமைப்பித்தனது வரிகள் பிரதிபலிக்கின்றன. கலைஞனைச் சாக விட்டுவிட்டு, அவனது புகழுடம்பைத் தூக்கி வைத்துக் கூத்தாடும் ரசிகத்தனத்தைக் குத்திக் காட்ட எழுந்த 'வீறாப்புத்தார்க்குச்சி' தான் இந்தப் பாடல் என்பார் தொ.மு.சி.ரகுநாதன். (புதுமைப்பித்தன் கவிதைகள். ஸ்டார் பிரசுரம் சென்னை, 1954, பக்கம் 92, 93)

வேளூர் வே.கந்தசாமிப்பிள்ளை

ஐயா, நான்
செத்ததற்குப் பின்னால்
நிதி திரட்டாதீர்!

இதுவே வேளூர் வே.கந்தசாமிப்பிள்ளை என்ற பெயரில் புதுமைப்பித்தன் எழுதிய பாடல்.

1948 ஜூன் 30

திருவனந்தபுரத்தில் 1948 ஜூன் 30 இல் புதுமைப்பித்தன் மறைந்ததற்குப்பின் நடந்தது என்ன? காலம் கழிந்தது. நடந்தது இதோ:

இரண்டு வயதுக் குழந்தை தினகரி. துணைவியார் கமலா அம்மையார் கொடிய வறுமை.

நாரண. துரைக்கண்ணன்

சென்னை மயிலாப்பூரில் நாராயணசாமி – அலமேலு மங்கை தம்பதியரின் மகனாக 24.8.1906 இல் பிறந்தவர் நாராண. துரைக்கண்ணன் (ஜீவா). நாராண துரைக்கண்ணனின் தலைமையில் புதுமைப்பித்தனது குடும்பநிதி திரட்டினார்கள். அதில் கணிசமான பலன் இல்லை. ஸ்டார் பிரசுரம் புதுமைப்பித்தனது நூல்களை வெளியிட்டது. அது மூலம் பெற்ற வருவாயும் போதுமானதாய் இல்லை.

புதுமைப்பித்தனும் கல்கியும் (தமிழ் மகன்)

தமிழகத்தில் புகழ்பெற்ற எழுத்தாளர் கல்கி ரா.கிருஷ்ணமூர்த்தி 'தமிழ் மகன்' என் புனைப்பெயரில் எழுதினார் (1.7.1943 கல்கி) ரசமட்டம் என்ற பெயரில் புதுமைப்பித்தன் தினமணியில் 4.7.1943 அதற்கு எதிர்வினை ஆற்றினார். 10.7.1943 கல்கியில் திரும்பவும் எழுத 11.7.1943 இல் தினமணியில் புதுமைப்பித்தன் பதில் தர 20.7.1943 கல்கி இதழில் மீண்டும் கல்கி எழுத 21.7.1943 தினமணியில் ரசமட்டம் என்ற பெயரில் புதுமைப்பித்தன் பதில் தர, விவாதங்கள் தொடர 11.8.1943 தினமணியில் ரசமட்டம் என்ற பெயரில் புதுமைப்பித்தன் எழுத, கல்கி–புதுமைப்பித்தன் கருத்துப் போர் கடுமையாக நடைபெற்றிருந்தது. (பார்க்க. புதுமைப்பித்தன், அன்னை இட்ட தீ பதிப்பாசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதி 1998 பக்கம் 306–344).

கடுமையாக கருத்து ரீதியாக மோதிக் கொண்டவர்கள் கல்கியும் – புதுமைப்பித்தனும்.

10.6.1951 கல்கி

கல்கி ரா.கிருஷ்ணமூர்த்தி, புதுமைப்பித்தன் மறைவிற்குப் பிறகு 10.6.1951 கல்கி இதழில் உருக்கமான அறிக்கை தந்தார்.

"........வாழ்க்கையில் துன்பம் நிறைந்த அம்சங்களைப் பற்றியே புதுமைப்பித்தன் விசேஷமாக எழுதினார். சமூகத்தில் எங்கே புரையோடி இருக்கிறது என்று ஆராய்ந்து பார்த்து எழுதினார். ஆகையால் அவருடைய கதைகள் சோகம் ததும்பியிருக்கும். படிக்கும்போது மனம் வேதனை அடையும். இதையெல்லாம்

எதற்காக இவர் கவனிக்கிறார், எதற்காக எழுதுகிறார். நம்மையும் படிக்கச் செய்கிறார் என்று கோபமே உண்டாகும். ஆனால் இப்படிச் சோகம் நிறைந்து வேதனை தரும் அவர் எழுத்தில் ஒரு பக்கத்தில் ஹாஸ்ய நரம்பு ஓடிக் கொண்டிருக்கும். 'அட பித்துக்குளி உலகமே! என்று நம்மை அடிக்கடிச் சொல்லச் செய்யும்.....

அவருடைய குடும்பத்தார் இன்று நிர்க்கதியான நிலையில் இருக்கின்றனர். 'குடும்பத்தார்' என்றால் எத்தனை பேரோ என்று பிரமிக்க வேண்டாம். மனைவியும் மகளுமாக இரண்டு ஆத்மாக்கள்தான்.

இத்தனை பெரிய தமிழ்நாட்டில் இவ்வளவு தமிழ் அன்பு வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடும் நிலையில் இந்த இரண்டு ஆத்மாக்களுக்கு ஜீவனத்தைப் பற்றிய கவலை இல்லாமல் செய்ய முடியாதா? *அற்புதமான சிறுகதை இலக்கியத்தைச் சிருஷ்டித்த புதுமைப்பித்தனின் சின்னஞ்சிறு புதல்விக்குக் கல்வி வசதி செய்து கொடுக்க முடியாதா? என்று 10.6.1951 கல்கியில் எழுதினார் கல்கி ரா.கிருஷ்ணமூர்த்தி.*

புதுமைப்பித்தன் நிதி

புதுமைப்பித்தன் நிதிக்குத் தமிழன்பர்கள் தாராளமாக அள்ளிக் கொடுக்க வேண்டும் என்று தமிழ்நாட்டின் எல்லா பத்திரிகைகளும் புதுமைப்பித்தன் நிதிக் கமிட்டியும் வேண்டுகோள் விடுத்திருக்கின்றன. அன்பர்களும் தங்களால் இயன்ற தொகைகளை அனுப்பி வருகிறார்கள். இலங்கையில் நிதி திரட்டும் வேலை மிகவும் ஜரூராக நடக்கிறது. வெகு சீக்கிரத்தில் பெரிய தொகையைச் சேர்த்து, தமிழ்நாட்டாருக்கு வழிகாட்டுகிறார்கள் இலங்கை அன்பர்கள். அவர்களைப் பின்பற்றி தமிழ்நாட்டு அன்பர்களும் புதுமைப்பித்தன் நிதிக்கு கீழ்க்கண்ட விலாசத்துக்கு விரைவாகத் தங்களால் இயன்ற பணத்தை அனுப்பிவைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம். நிதி அனுப்பி வேண்டிய விலாசம்: வை.கோவிந்தன், பொக்கிஷர், புதுமைப்பித்தன் நிதிக் கமிட்டி, 115 E, மோபரீஸ் சாலை, சென்னை-14. (பழ. அதியமான், சக்தி வை.கோவிந்தன், சென்னை, 2008, பக்கம் 104, 105)

கலைக்கதிர் - ஜி.ஆர்.தாமோதரன்

'கலைக்கதிர்' எனும் மாத இதழ் ஜி.ஆர்.தாமோதரன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது. அதில் கர ஆண்டு ஆடி மாதம் மலர் 3 இதழ் 8 இல் 2வது பக்கத்தில் **'ஒரு கடமை'** என்று ஒரு வேண்டுகோள் வந்துள்ளது. இதோ கலைக்கதிர் முகப்புப் பக்கமும் ஒரு கடமை என்ற வேண்டுகோளும்....



ஒரு கடமை

'புதுமைப் பித்தன்', வேளூர்க் கந்தசாமிக் கவிராயர்' என்ற புனை பெயர்களுக்குள் ஒளிந்து தமிழ்த் தொண்டு செய்த திரு. சோ. விருத்தாசலம் மறைந்து மூன்று ஆண்டுகள் ஆகின்றன.

'கலைஞர்கள் திருமணம் செய்துகொள்ளக் கூடாது' என்று ஒரு சட்டமும் கிடையாது. புதுமைப் பித்தன் திருமணம் ஆனவர். ஒரு குழந்தையையும் மனைவியையும் விட்டுவிட்டுக் காசநோய் காட்டிய வழியில் சென்று மறைந்துவிட்டார். எவனையும் மதியாமல் எழுத்தின் தரத்தையே எடைபோட்டு வாழ்ந்த அவருக்குப் பணத்தின் தரம் எருமலே போய்விட்டது. அவர் கண்ணை மூடிவிட்டார்; மனைவியும் மகளும் வாழ வழி.........?

நாம் அவர் கதைகளைப் படிக்கிறோம்; கவிதைகளைச் சுவைக்கிறோம். 'ஆகா' என்று தலையை ஆட்டுகிறோம். 'பிரமாதம்' என்று புகழ்கிறோம். இன்பம் அடைகிறோம். இந்த இன்பத்திற்கு விலை கொடுக்கவேண்டும் என்று புதுமைப் பித்தன் நினைவு நிதிக் குழுவினர் சொல்கிறார்கள். ஆம்; உண்மைதான்.

அவருடைய நினைவுக்காக—அவரை நம்பித் திருமணம் செய்துகொள்ளத் துணிந்த அம்மையாருக்காக—அவர்களின் குழந்தைக்காக உதவவேண்டியதுதான்.

உங்களால் இயன்ற தொகையைத் திரு. வை. கோவிந்தன், சக்தி காரியாலயம், சென்னை—14 என்ற விலாசத்துக்கு அனுப்பி உதவுங்கள்.

கலைக்கதிர் கர ஆண்டு ஆடி மாதம்
மலர் 3 இதழ் 8 பக்கம் 2

டி.கே.எஸ். சகோதரர்கள் - எஸ்.டி. சுந்தரம்

டி.கே.எஸ். சகோதரர்கள் ஸ்ரீதரின் **'ரத்த பாசம்'** நாடகத்தையும், எஸ்.டி.சுந்தரம் தனது **'மனிதனும் மிருகமும்'** என்ற நாடகத்தையும் நடத்தி அவற்றின் வசூலை புதுமைப்பித்தன் குடும்பத்துக்கு நிதியாகத் தந்தார்கள்.

தமக்குக் கிடைத்த பத்தாயிரம் ரூபாயை நல்லபடியாகக் கமலாம்பாள் முதலீடு செய்தார். ராஜா அண்ணாமலைபுரத்தில் ஒரு சிறு வீட்டைக் கட்டி, அதிலே வருவாய்க்கு ஒரு சாதனமாக தமது கணவரின் பெயரில் நூலகம் ஒன்றை நிறுவினார்.

16.9.1954 - புதுமைப்பித்தன் படத்திறப்பும் - கல்கியும்

அந்த நூலகத்தையும், அதிலே புதுமைப்பித்தனின் உருவப்படத்தையும் கல்கி *16.9.1954* இல் திறந்துவைத்தார். *(கல்கி மறைந்தது டிசம்பர் 5, 1954)*

கமலாம்பாள்

இந்தத் தகவலை எல்லாம் தெரிவித்த கமலாம்பாள் அந்தத் திறப்புவிழா நிகழ்ச்சிகளைப் புகைப்படம் எடுக்கத் தவறிவிட்டதை எண்ணிக் குறைபட்டுக் கொண்டார். எல்லா நிகழ்ச்சிகளையும் இல்லாவிட்டாலும், புதுமைப்பித்தனின் படத்தைக் கல்கி திறந்துவைத்ததை எடுத்திருந்தால் போதும், இலக்கியச் சிறப்புவாய்ந்த அரியதொரு படமாய் இருந்திருக்கும்.

தமக்கு இவ்வளவு தூரம் உதவிபுரிந்து பெருமையும் அளித்தவரிடம் தாம் கொண்ட நன்றி உணர்ச்சியையும் மரியாதையையும் பின்னொரு சமயம் பண்புமிக்க முறையில் கமலாம்பாள் புலப்படுத்தினார்.

புதுமைப்பித்தனின் இலக்கிய மதிப்பீட்டுக் கட்டுரைகளை எல்லாம் தொகுத்து வெளியிடும் நோக்கத்துடன் ஒரு புத்தக வெளியீட்டாளர் கமலாம்பாளை அணுகுகிறார்கள். அவர்களுக்குச் சம்மதம் தெரிவிக்கையில் கல்கியைப் பற்றிய கட்டுரைகள் அந்தப்புத்தகத்தில் இடம்பெறக்கூடாது என்று அவர் நிபந்தனை போட்டார். அதற்கு அவர் இணங்காததால், அவர்களுடைய உத்தேச வெளியீட்டுக்குத் தாம் அனுமதி தர முடியாது என்று கூறிவிட்டார். மாறாக அவர்கள் நடக்காதபடி கண்டிப்பான எச்சரிக்கை விடுத்துத் தடையும் விதித்தார்.

சுந்தா

இதற்கு முன் கமலாம்பாள் வெளியிட்டிராத இந்தத் தகவல், முதல் தடவையாக இந்த வரலாற்றில் உரியபடி பதிவாகிறது என்பார் சுந்தா. (பொன்னியின் புதல்வர், கல்கியின் வாழ்க்கை வரலாறு, சென்னை, *1976*, பக்கம் *646 – 648*)

கல்கியின் பெருந்தன்மை

புதுமைப்பித்தன் தம்முடைய வாழ்நாள் முழுவதும் ஒருவரைச் சதா தாக்கி எழுதியும் பேசியும் வந்தார். அவர் யார் என்றால் நம்முயை கல்கி ஆசிரியர் ஸ்ரீ ரா.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தான். எதிர்ப்புக்கு ஆளாகிய கல்கி புதுமைப்பித்தனின் குடும்பத்துக்கு நிதி திரட்டித் தந்தார்.

முல்லை முத்தையா

7.6.1920 இல் தேவகோட்டையில் பிறந்தவர் முல்லை முத்தையா.

பாவேந்தர் பாரதிதாசன்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனிடம் சென்று பதிப்பகம் துவங்க இருக்கும் யோசனையைத் தெரிவித்தபோது, பதிப்பகத்திற்கு என்ன பெயர் என்று கேட்க '**கமலா**' **என்றார் முல்லை முத்தையா. புதுமைப்பித்தனின் மேல் அன்பு கொண்டவர்.** ஆனால் பாரதிதாசன் 'முல்லை' என்று பெயர் வைக்கச் சொல்ல அவ்வாறே முல்லை பதிப்பகம் உருவானது. (இந்து தமிழ் திசை *23.5.2020* பக்கம் *6* ஆசை கட்டுரை)

புதுமைப்பித்தன் உதிர்ந்த முத்துக்கள் என்ற நூலை முல்லை முத்தையா வெளியிட்டதாக அக்கட்டுரையில் உள்ளது.

1952 அக்டோபர்

1952 அக்டோபரில் முல்லை வெளியீடாக *12* அணா விலையில் *64* பக்கங்களில் வெளிவந்த நூல் '**வேடிக்கை மனிதர் புதுமைப்பித்தன்**'. இதோ அந்த நூலின் முகப்புப்பக்கம்.

வேடிக்கை மனிதர்

புதுமைப்பித்தன்

★

முல்லை - முத்தையா தொகுத்தது

★

முல்லை வெளியீடு :: சென்னை - 17

வேடிக்கை மனிதர் புதுமைப்பித்தன் நூலை யாருக்கு சமர்ப்பணம் செய்தார் தெரியுமா? இதோ அந்த சமர்ப்பணப் பக்கம் அப்படியே......

சமர்ப்பணம்

புதுமைப்பித்தன் தம்முடைய வாழ்நாள் முழுவதும் ஒருவரைச் சதா தாக்கி எழுதியும், பேசியும் வந்தார்.

அவர் யார் என்றால் நம்முடைய 'கல்கி' ஆசிரியர் ஸ்ரீ. ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தான். எதிர்ப்புக்கு ஆளாகிய 'கல்கி' இன்று புதுமைப்பித்தனின் குடும்பத்துக்கு நிதி திரட்டி வருகிறார்.

பேராசிரியர் வ. ரா. அவர்கள் சில காலம் 'கல்கி'யை எதிர்த்தார்; சில காலம் போற்றினார். அவருக்கு நிதி திரட்டி அவர் வாழ்நாளிலேயே அளித்து அவரை மகிழ்வித்தார் கல்கி.

கல்கியின் இத்தகைய உயர் குணத்தை என்ன என்பது! 'வைதாரை வாழ்விக்கும் தமிழ்ப் பண்பு' என்றே சொல்ல வேண்டும்! அத்தகைய ஆசிரியர் கல்கிக்கு இந்நூல்

சமர்ப்பணம்

—முல்லை. முத்தையா

கல்கி மறைந்தார்

புதுமைப்பித்தனது குடும்ப நிதி திரட்ட வேண்டிய அவசியத்தை ஏற்றுக் கொண்ட கல்கி ரூ.17000 வரையிலும் வசூல் செய்து கொடுத்தார். இந்தப் பணத்தை வைத்து சிறு வீடு ஒன்றைக் கல்கி வாங்க முதன்முதலாகக் கமலாம்பாள் சென்னையில் தன் சொந்த வீட்டிற்கு குடி போயிருக்கிறார். (ரகு நாதனுடனான சந்திப்பு பற்றி 20.7.95 இல் சுந்தர ராமசாமி எழுதிய மனக்குகை ஓவியங்கள் நூலில்)

கல்கி மறைந்தார் - தொ.மு.சி. தீட்டிய தலையங்கம்

கல்கி 1954 டிசம்பரில் மறைந்தபோது, கல்கி மறைந்தார் என்று ஆச்சரியப்படத்தக்க வகையில் தலையங்கம் தீட்டியர் தொ. மு.சி.ரகுநாதன். *எதற்காகக் கல்கி மறைந்ததற்கு தலையங்கம் எழுதினீங்க, நாம அதை அசட்டைன்னா பண்ணணும் என சுந்தர ராமசாமி, தொ.மு.சி. ரகுநாதனிடம் கேட்ட போது*

சுந்தர ராமசாமி

“அப்படி இல்லை, அவர் (கல்கி) சில முக்கியமான பணி சமுதாயத்துக்குச் செய்திருக்கிறார்' எனறு சொல்லிவிட்டுத் தலையங்கத்தைப் படித்துக் காட்டினார். படிச்சுக்காட்டிய உடனே எனக்குக் கல்கியிடமிருக்கும் மதிப்பை பல மடங்கு அதிகமான மதிப்பு அவருக்கு இருக்கிறது என்பதை உணர்ந்தேன்'. (தொ.மு.சி. ரகுநாதன் நினைவோடை, சுந்தர ராமசாமி, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில் 2014, பக்கம் 39,40)

லாட்டரியில் பரிசு

அந்தக் கால கட்டத்தில் தமிழ்நாடு அரசு லாட்டரிச் சீட்டில் இரண்டு இலட்சம் ரூபாய் பரிசு விழுந்தது. கமலாம்பாளின் கஷ்டம் தீர்ந்தது.

கமலா புதுமைப்பித்தனின் கதைகள்

"கமலாம்பாளின் கண்களைப் பார்த்தும் அவள் கண்கள் எனக்குப் பிடித்துப் போய்விட்டன''. அந்தக் கண்களுக்காகவே அவளைக் கல்யாணம் பண்ணிக்கொண்டது சரி என்று பட்டது. கமலாவை நான் கண்ணா என்று தான் அழைப்பேன். கண்ணாள் என்றுதான் கடிதம் எழுதுவேன் என்பார் புதுமைப்பித்தன் தனது துணைவியார் பற்றி.

புதுமைப்பித்தன் கதைகளில் கமலா

8.7.1934ல் புதுமைப்பித்தன் எழுதிய **உணர்ச்சியின் அடிமைகள்** கதையின் நாயகி **கமலா**. 15.1.1937 மணிக்கொடியில் புதுமைப்பித்தன் எழுதிய **ஒரு நாள் கழிந்தது** கதையின் நாயகி **கமலம்**. 1941க்கு முன்பு புதுமைப்பித்தன் எழுதிய **பொய்க்குதிரை** கதையின் நாயகி **கமலா** என்ற **கமலம்**. புதுமைப்பித்தன் தன் துணைவியார் கமலா அம்மையார் மீது கொண்ட எல்லையற்ற அன்பிற்கு இதுவும் ஓர் சான்றுஅன்றோ!

1931 / 1932 ஜூலை 14 இல் திருமணமாகி ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு மக்கள் பேறு, முதல் குழந்தை பிறந்து உடனே இறந்துவிட்டது. (1937 / 1938) பின்பு இரண்டு ஆண்டுகள் கழிந்து ஒரு பெண் குழந்தை பிறந்தது (1939 / 1940) மூன்று மாதங்களில் இறந்தது. மூன்றாவதாக 1946 இல் பிறந்த பெண் குழந்தை தினகரி என்ற பர்வதகுமாரி. 1948 ஜூன் 30 இல் புதுமைப்பித்தன் மறைவு. புதுமைப்பித்தன் வாழ்ந்த காலத்திலும் அவரது மறைவிற்குப் பிறகும் கமலா புதுமைப்பித்தன் (கமலா விருத்தாசலம்) பல சிறுகதைகள் எழுதியுள்ளார்.

7.7.1940 கடிதம்

'எனது ஆருயிர்க் கண்ணாளுக்கு' என்று துவங்கி இப்படிக்கு உனதே உனது சொ.வி.ஆயிரம் முத்தங்கள் எனும் புதுமைப்பித்தனின் 7.7.1940 ஆம் ஆண்டில் கமலா புதுமைப்பித்தனுக்கு எழுதிய கடிதம் கண்மணி கமலாவிற்கு தொகுப்பில் 28வது கடிதமாக வந்துள்ளது. அதில் புதுமைப்பித்தன் எழுதுகிறார்.

எழுது எழுது

'...நீயும் இந்த விஷயத்தில் என் கூடத் தொடர்ந்து வரவேண்டும். உன்னுடன் சரிசமமாக இருக்கவேண்டும் என்றுதான் ஆசை. அதனால்தான் **உன்னை எழுது எழுது என்று தொந்தரவு செய்கிறேன்.** *கண்ணா உன் புத்தியில் எனக்கு ரொம்ப நம்பிக்கை. நீ மனசு வைத்தால் நடக்காத காரியம் இருக்காது'.*

கடிதங்களுக்குப் பதில்

புதுமைப்பித்தன் கமலாவிற்கு எழுதிய கடிதங்கள் பல அச்சில் வந்துள்ளது. 'அவர் கடிதங்களுக்குப் பதில் எழுதுவதிலிருந்தே நானும் கதைகள் எழுதிப் பழக்கப்பட்டேன்' என்கிறார் கமலா *அம்மையார். (ஆகஸ்ட் 1960 மலாயாவில் புதுமைப்பித்தன் நினைவு மலரில் கமலா புதுமைப்பித்தன்)*

31.8.1940

கண்ணு, என்று ஆரம்பித்து புதுமைப்பித்தன் கமலா அம்மையாருக்கு எழுதிய கடிதத்தில்

'காசு மாலை' கதையைத் தேடி எடுத்துவிட்டேன்....

.... உன் கதைகளில் எதை கதைத் தொகுதி புஸ்தகத்திற்கு கொடுப்பது, நீ கீழ்க்கண்டவைகளில் எதற்கு முதல் ஓட்டுக் கொடுக்கிறாய். விஷயம் உடனே தெரியவேண்டும். நீடித்து யோசிக்க அவகாசமில்லை.

1. குழந்தை மீனாள்
2. ஆசை
3. வார்த்தை விவரம்
4. திறந்த ஜன்னல்
5. முதலைச் சண்டை
6. ஊமச்சியின் கல்யாணம்

உன் அபிப்ராயமும் என்னுடையதும் ஒத்துவருகிறதா எனபதைப் பார்ப்போம் என்று கடிதம் எழுதியிருக்கிறார் புதுமைப்பித்தன்.

"மணிக்கொடி"

(இத்துடன் "காந்தி" இணைக்கப்பட்டிருக்கிறது)

நிர்வாக ஆசிரியர் : ஆசிரியர் :
பி. எஸ். ராமையா. கே. ஸ்ரீனிவாசன்

கோடி - 4. மணி - 10. ஜனவரி, 31, 1937. மாத மிருமுறை.

எமனுடன் போட்டி க. ரா. சுப்ரமண்யம்	....	....	10
"ஜே! பவானி" சு. குருசாமி பி. ஏ.	....	....	14
ஒரு தேர்தல் கதை கி. ரா.	...	....	18
ஜெயிலில் "கதாரஸிகன்"	....	....	26
விஷ கன்னிகை என். சிதம்பரசுப்பிரமணியன்	....	....	33
பொய்யா, புளுகா? மீ. லி. சபரிராஜன்	....	....	41
பிசகு சேது அம்மாள்	....	....	42
பேரின்பம் "சிற்றம்பலம்"	....	....	46
காசுமாலை எஸ். கமலாம்பாள்	....	....	49
வேதாந்தக் கதை "சேட்லூர் அப்பர் ஸ்வாமிகள்"	....	....	73
நிழலும் அதன் கதையும் "ஸஞ்சயன்"	....	....	75
பிசாசு சொன்ன கதை "ரஸப்பிரபா"	....	....	78

"மணிக்கொடி" கதைகளில் வெளியாகும் பெயர்கள் பாத்திரங்கள் எல்லாம் கற்பனை. அவை யாரையும் குறிப்பிடுவனவல்ல.

"மணிக்கொடி" மாதமிருமுறை.
பிரதி மாதம் 15, 30 தேதிகளில் வெளிவரும்.
வருஷச் சந்தா: உள் நாடு ரூ. 3—0—0. வெளி நாடு ரூ. 4—8—0.
தனிப்பிரதி அணா 2.

காசுமாலை

'காசுமாலை' சிறுகதை எஸ்.கமலாம்பாள் (புதுமைப்பித்தனின் துணைவியார் எழுதி மணிக்கொடி 1937 ஜனவரி 31 இதழில் வெளிவந்துள்ளது. இதோ அந்த முகப்புப் பக்கம்......



காசுமாலை

எஸ். கமலாம்பாள்

எழுதியது.

சவரிப் பெருமாள் பிள்ளை தென்னாட்டிலே பெரும் செல்வாக்குள்ளவர். வாய் கூசாமல் பெரும்பணக்காரர் என்றே சொல்லலாம். ஆனால் இவ்வளவு இருந்தும் இவர் வாழ்க்கைத் துணைவியாக வந்த ஒவ்வொருவரும் இவரோடு பழகி ஒன்றிரண்டு வருடங்களில் இவரைப் பிரிந்து விண்ணுலகத்திற்குச்சென்றுவிட்டார்கள். ஆனால் அவர்கள் தங்கள் தங்கள் ஞாபகார்த்தத்திற்காக ஒன்றிரண்டு குழந்தைகளை விட்டு விட்டுதான் சென்றார்கள். இவர் பிறகும் முறைப்படி மூன்றாவது மனைவியாக பக்கத்தூர் கணக்கப்பிள்ளை மகள் லக்ஷ்மியைக் கலியாணம் செய்துகொண்டார், புண்ணியவதி புது மனைவி வந்தது தான் தாமதம், சர்க்காரும் அவருக்கு வேலையில் ஓய்வு கொடுத்து உபகாரச்சம்பளம் போட்டுவிட்டார்கள்.

சவரிப் பெருமாள் பிள்ளை பென்ஷன் பெற்ற பிறகு பட்டணங்களில் இருக்கப் பிடிக்காமல் தம் நிலபுலங்கள் கிடக்கும் கிராமத்தில் வந்து குடி ஏறினார்.

பழவூர் தன் பேருக்கேற்றபடி. பழைய ஊர்தான். நிம்மதியாக தன் கிராமத்தில் வசிப்பதே அவர் தெய்வபோகம் என்று கருதினார். அக்கிராமத்திற்கும் டவுனுக்கும் 30 மைல் தூரம்; (திருநெல்வேலி ஜில்லாவாசிகளுக்கு டவுன் என்றால் ஒரே ஊர்தான் ஞாபகம் வரும். அதுதான் திருநெல்வேலி டவுன்) அங்குதான் அவருடைய மூத்த தாரங்களின் குழந்தைகள் படித்து வருகிறார்கள்.

சவரிப் பெருமாள் பிள்ளை அக்கிராமத்தில் குடியேறி 20 வருஷங்கள் ஆயிற்று. தனது மூன்றாவது மனைவிக்கும் ஆணும் பெண்ணுமாக நாலைந்து குழந்தைகள். குடும்பம் பெரிதாயிற்று. அதில் கௌரி, காமாக்ஷி என்று இருபெண்குழந்தைகள். இவர்கள் அக்கிராமத்திலுள்ள பள்ளிக்கூடத்தில் படித்து வந்தார்கள்.

கௌரிக்கு வயது 18. பார்ப்பதற்கு அழகாகவே இருப்பாள். காமாக்ஷிக்கு வயது 16. அவளும் கௌரியின் ஜாடை; தூரத்தில் பார்த்தால் அவளோ இவளோ வென்று சந்தேகிக்கும்படி இருக்கும். பெண்களுக்குப் பிராயம் ஆனால் பெற்றோருக்குக் கவலைதானே. ஏதாவது நல்ல உயர்ந்த குடும்பத்தில் பெண்களைக் கலியாணம் செய்து வைக்கவேண்டும் என்பது அவர்கள் ஆசை.

சவரிப் பெருமாள்பிள்ளை அவர்களுக்கு ஆசைவெகு சீக்கிரத்தில் நிறைவேறியது,

காசுமாலை சிறுகதை மிக நீண்ட கதை. கதை மணிக்கொடியில் 49 வது பக்கத்தில் துவங்கி 71வது பக்கத்தில் முடிவடைகிறது. மொத்தம் 23 பக்கங்கள்.

1937 துவக்கத்திலேயே மணிக்கொடியில் எஸ்.கமலாம்பாளும் தனது கணவரைப் போலவே கதைகள் எழுத ஆரம்பித்துவிட்டார்.

தினகரி சொக்கலிங்கம்

என் அருமைத் தந்தை புதுமைப்பித்தன் அவர்கள் தனது மனைவியை வெறும் பெண்ணாக மட்டுமே நடத்தியவர் அல்லர். அவளையும் சக மனுஷியாக தமது உயிரின் மறுபாதியாகக் கண்டவர். எனது அம்மாவிடம் மறைந்து கிடந்த எழுத்தார்வத்தை அறிந்து, ஊக்கம் தந்து எழுதவைத்தவர். **எனது பெற்றோர் வாழ்ந்த காலகட்டத்திலே இருவருமே எழுத்தாளர்களாக விளங்கியது பெருமைப்படக்கூடிய செய்தி.** *அம்மா எழுதிய கதைகள் அப்போதைய பத்திரிகைகளில் வெளிவந்ததோடு மட்டுமல்லாது 'காசுமலை' எனத் தனிப்புத்தகமாகவும் வெளியாகியுள்ளது என்பார் புதுமைப்பித்தன் மகள் தினகரி சொக்கலிங்கம்.*

(யாதும் ஊரே, பம்மல் நாகல்கேணித் தமிழ்ச்சங்க மாத இதழ் ஆசிரியர் நா.வை. சொக்கலிங்கம் (இங்கர்சால்) மணிக்கொடி இலக்கியத்தின் மணிமுடி புதுமைப்பித்தன் நூற்றாண்டு விழாசிறப்பிதழ் 10.10.2005 பக்கம் 40.)

'காசுமாலை' கதை தனி நூலாகவே வெளிவந்திருக்கிறது. எஸ்.கமலாம்பாள் எழுதிய மற்ற கதைகள் என்ன ஆயின? 31.8.1940 கதைக்கோவையில் பிரசுரிக்க குழந்தை மீனாள், ஆசை, வார்த்தை விவரம், திறந்த ஜன்னல் முதலைச் சண்டை, ஊமச்சியின் கல்யாணம் இந்தக் கதைகளில் எதைப் பிரசுரிக்க என்று கேட்டு புதுமைப்பித்தன் எழுதியுள்ளார்.

1941 கதைக் கோவை முதல் தொகுதி

40 எழுத்தாளர்களின் கதைகள் 40, 1941 ஆம் ஆண்டில் கதைக் கோவையில் வெளியாகியுள்ளது.

1942 இரண்டாம் தொகுதி

1942 ஆம் ஆண்டில் கதைக் கோவையின் 2 ஆம் தொகுதி 50 எழுத்தாளர்களின் கதைகள் 50 வெளியாகியுள்ளது.

1943 - மூன்றாம் தொகுதி

கதைக் கோவையின் மூன்றாம் தொகுதி 60 எழுத்தாளர்களின் 60 கதைகள் வெளியாகியுள்ளது. கிளேஸ் ரூ 7 அணா 8 ஆண்டிக் ரூ ஒன்பது.

இதில் எஸ்.கமலாம்பாளின் ஊமச்சியின் கல்யாணம் வெளியாகி உள்ளது. 1943 இல் வெளிவந்த மூன்றாவது கதைக் கோவையில் புதுமைப்பித்தன் 9.7.1939 சூறாவளியில் எழுதிய **‘செவ்வாய் தோஷம்’** *மறுபிரசுரமாக வெளிவந்துள்ளது.*

அல்லயன்ஸ்

கதைக் கோவையை பிரபல அல்லயன்ஸ் நிறுவனத்தார் வெளியிட்டனர். **புதுமைப்பித்தனும் அவரது துணைவியார் எஸ்.கமலாம்பாளும் ஒரே நேரத்தில் ஒரே புத்தகத்தில் கதைகளை எழுதியுள்ளார்கள்.**

டி.எம்.நாராயணசாமிப் பிள்ளை

25.12.1943 இல் மூன்றாவது கதைக் கோவைக்கு டி.எம். நாராயணசாமிப்பிள்ளை நான்கு பக்கங்கள் முன்னுரை தந்துள்ளார். அதில் எம்.எஸ்.கமலா என்ற மற்றொரு பெண் எழுத்தாளர் கார்த்திகைச்சீர் என்ற கதையைத் தந்துள்ளார். 612 பக்கங்கள் கொண்ட அந்த நூலில் புதுமைப்பித்தனின் செவ்வாய் தோஷம் 380 வது பக்கம் முதல் 388 வது பக்கம் வரை வெளிவந்துள்ளது.

எஸ்.கமலாம்பாளின் ‘ஊமச்சியின் கல்யாணம்’ (இது புதுமைப்பித்தன் எழுதியது) ஊமைச்சியின் கல்யாணம் என்ற தலைப்பில் 80வது பக்கத்திலிருந்து துவங்கி 94 வது பக்கம் வரை பிரசுரமாகியுள்ளது. எளியேனிடம் 83 வது பக்கம் முதல் 94 பக்கம் வரைதான் உள்ளது. அந்த கதையின் ஆதியும் அந்தமும் இல்லை.

1944 பிப்ரவரி சக்தி

1944 பிப்ரவரியில் வெளிவந்த ‘சக்தி’ இதழில் புத்தக உலகம் பகுதியில் பக்கம் 329 இல் கதைக் கோவை 3வது தொகுதியின் மதிப்புரை வந்துள்ளது. அதில் புதுமைப்பித்தனது பெயர் குறிப்பிடப்படவில்லை. ஜனவரி 1944 **‘சக்தி’** *இதழில் பொங்கல் மலரிலும் 29 பேர்களது கதை கட்டுரைகள் வெளிவந்த நிலையிலும் புதுமைப்பித்தனது படைப்பு எதுவும் அதில் இடம் பெறவில்லை*

1944

ஆசிய ஜோதிப் பிரசுரம் மைலாப்பூர் சென்னை கதைக் கொடி மலர் 1 என்று 1944 ஏப்ரலில் '**சக்தி**' ஆசிரியர் தி.ஜ.ர.வின் 'கதை இலக்கியம்' என்ற தலைப்பில் 5 பக்க முன்னுரையோடு 14 எழுத்தாளர்களின் கதைகளை வெளியிட்டது. விலை ரூ.2 அணா எட்டு. இதில் புதுமைப்பித்தன் கதையோ, எஸ்.கமலாம்பாள் கதையோ இல்லை. (சக்தி உரிமையாளர் வை. கோவிந்தன் இவர்தான் புதுமைப்பித்தன் குடும்ப நிதி திரட்டும் பொக்கிஷர்)

தமிழ்நாட்டுச் சிறுகதைகள் - 10

க.நா.சுப்ரமண்யம் பி.ஏ. எழுதிய அழகி முதலிய 13 கதைகள் 1944 இல் அல்லயன்ஸ் கம்பெனியாரால் வெளியிடப்பட்டது. சாதா பைண்ட் 2 ரூ கலிகோ 2 ரூ எட்டணா. 1943 இல் புதுமைப்பித்தன், கமலா புதுமைப்பித்தன் கதைகளைப் பிரசுரித்தவர்கள் 1944 இல் பிரசுரித்ததாகத் தெரியவில்லை.

ரோனால்டு ஆக்டன் - சூன்யக்காரி

ரோனால்டு ஆக்டன் எழுதிய கதையை புதுமைப்பித்தன் மொழி பெயர்த்து மணிக்கொடியில் 1937 செப்டம்பர் 1 இதழில் எழுதினார். சூன்யக்காரி என்ற தலைப்பில் அது பக்கம் 44 முதல் 48 வரை வந்துள்ளது.

கணவரின் வாரிசாக கமலா

அதே இதழில் பக்கம் 49 முதல் 53 வரை எஸ்.கமலாம்பாளின் '**குழந்தை மீனாள்**' கதை பிரசுரமாகி உள்ளது.

மன நிழல்

ஆ.இரா. வேங்கடாசலபதி பதிப்பாசிரியராக வெளியிட்ட புதுமைப்பித்தன் கதைகள் நூலுக்கு 'பதிப்பியல் நோக்கில் புதுமைப்பித்தன் கதைகள்' என்று 17 பக்க முன்னுரையில் ஓரிடத்தில் பக்கம் 24 இல், கமலா விருத்தாசலம் எழுதிய 'மனநிழல்' கதை பற்றி ஒரு தகவலைத் தந்துள்ளார்.காசுமாலை, குழந்தை மீனாள் **ஆசை வார்த்தை விவரம், திறந்த ஜன்னல், முதலைச் சண்டை, ஊமச்சியின் கல்யாணம், மனநிழல்** ஆகிய கதைகள் தவிர கமலா விருத்தாசலம் வேறு கதைகள் எழுதியுள்ளார்களா? என்று தேடினேன்.

"மணிக்கொடி"

(இத்துடன் "காந்தி" இணைக்கப்பட்டிருக்கிறது)

ஆசிரியர் : கே. ஸ்ரீநிவாசன்.

நிர்வாக ஆசிரியர் : பி. எஸ். ராமையா.

கோடி - 5. மணி - 3. செப்டம்பர், 1, 1937. மாதமிருமுறை:

முதல் அத்தியாயம் 10

சதி அனஸூயா 11
"ஸ்ரீமான்"

அதிர்ஷ்டக்கட்டை 17
என். நாராயணன். பி. ஏ.,

அனாதாஸ்ரமம் 21
பி. எஸ். ராமையா.

ருக்கு கட்டின கோவில் 33
"ஜானகிநாதன்"

கடைசிப் பிரிவு 36
"ஆதிசேஷன்"

யாத்ரா மார்க்கம் 41
"நசிகேதன்"

சூன்யக்காரி 44
புதுமைப்பித்தன்

குழந்தை மீனாள் 49
ஸ்ரீமதி கமலாம்பாள்

நிழலும் அதன் கதையும் 54
"ஸஞ்சயன்"

அவனுடைய மன்னிப்பு 58
எம். எஸ். கிருஷ்ணசாமி.

"மணிக்கொடி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் பாத்திரங்கள் யாவும் கற்பனை. அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

"மணிக்கொடி" மாதமிருமுறை தனிப்பிரதி விலை அணா 2.

வருஷச்சந்தா :—உள் நாடு ரூ 3 0 0

வெளி நாடு ரூ 4 8 0

புதுமைப்பித்தனும் அவரது துணைவியாரும் ஒரே இதழில் அடுத்தடுத்து எழுதியுள்ளதை எண்ணி மகிழ்வோமாக!

‘குழந்தை மீனாள்’ முகப்புப் பக்கம்.

குழந்தை மீனாள்

ஸ்ரீமதி

எஸ். கமலாம்பாள்

எழுதியது.

“மீனா, மீனா! ஓடிவா” என்று சொல்லிக் கொண்டே ஜானகி லக்ஷ்மியின் வீட்டிற்குள் நுழைந்தாள். குழந்தை மீனா முன்கட்டு முற்றத்தில் உள்ள குழாயைத் திருப்பிவிட்டு விழும் தண்ணீரைத் தன் இரு சிறு கரங்களாலும் ஏந்தி நாலு பக்கமும் தூவிச் சிதறி விளையாடிக்கொண்டிருந்தாள்.

...தன்னை ஜானகி கூப்பிடும் குரல் கேட்டு ஒரு தடவை திரும்பிபார்த்த குழந்தை தன் விளையாட்டு நினைப்பில் சட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

“இந்தா! பார் மீனா! தண்ணீரில் விளையாடக் கூடாது! ஜுரம் வந்திடும். அதோ பூச்சாண்டி வரான் பாரு” என்று சொல்லிக்கொண்டே குழந்தையை மிக்க அன்போடு வாரி எடுத்தாள் ஜானகி.

உற்சாகமாக அந்த விளையாட்டில் மனதைப் பறிகொடுத்த குழந்தை ஜானகி சென்று எடுத்ததும் “போடி! வரமாட்டேன் போ” என்று அவள் இடுப்பிலிருந்து திமிறிக்கொண்டு கீழே இறங்குவதற்குப் பிடிவாதம் பண்ணிற்று. குழந்தையைக் கீழே விட ஜானகிக்கு சற்றும் சம்மதமில்லை.

குழந்தை மீனாளோடு கொஞ்சி விளையாடவேண்டும் என்றே அவள் தினம் சாயங்காலம் லக்ஷ்மி வீட்டிற்கு வருவாள்.

“மீனாளோடு நன்றாகப் பழகிவிட்டோம், இன்று நாம் சென்று ‘மீனா ஓடிவா’ என்பதற்குள் வந்துவிடுவாள்” என்று நினைத்துக்கொண்டே ஜானகி அன்று லக்ஷ்மி வீட்டிற்குள் நுழைந்தாள்.

அவள் நினைப்பிற்கு மாறாக அன்று குழந்தை அவள் இடுப்பிலிருந்து கீழே இறங்கவேண்டும் என்று ஒரே பிடிவாதம் செய்து அழத்தொடங்கிவிட்டது. என்றைக்கும் குழந்தையை ஜானகி சென்று எடுத்தவுடன் அவள் மூக்கில் முத்தம் கொடுத்து, பல்லை இறுக கடித்துக் கொண்டு மலர்போன்ற தன் சிறு கைகளால் கன்னத்தில் படபட வென்று இரண்டு மூன்று தடவை அடிப்பாள். அப்படி அடிபடுவதில் ஜானகிக்கு ஒரு திருப்தி. அடிப்பதில் மீனாளுக்கு ஒரு சந்தோஷம். கொஞ்சநேரம் அடித்துவிட்டு “வலிக்கவில்லையா முகத்தை கொடுத்துக்கொண்டிருக்கிறாயே” என்பதுபோல குழந்தை அவள் கன்னத்தை ஒரு தடவை தடவிவிட்டுக் கலகலவென்று சிரிப்பாள். அந்த சிரிப்பில் ஜானகிக்கு எவ்வளவு திருப்தி! சந்தோஷம்! குழந்தையை மார்போடு அணைத்து நாலைந்து தடவை முத்தம் கொடுப்பாள்.

ஒரு நாள் மீனாவைப் பார்க்க முடியாவிட்டால் அவளுக்கு என்னமோ போல் இருக்கும். இருப்புக்கொள்ளாது. வீட்டில்





1951 காதல் ஆண்டு மலரில் '**சந்தேகம்**' என்ற கதையும், கலைக்கதிர் பொங்கல் மலர் *1952* இல் '**நாலணாத்துட்டு**' என்ற கதையும் கிடைத்தது. அதன் முகப்புப்பக்கங்கள் இதோ:

நாலணாத் துட்டு

"ஐயா! சாமி! இரண்டு கண்ணுமில்லாத குருடன் சாமி! ஒரு காலணா போடுங்கோ! சாமி! ஐயாமார்களே! அம்மாமார்களே! ஒரு காலணா போடுங்களேன். ஐயோ! சாமி! மூன்று நாளாகப் பட்டினி சாமி! கொஞ்சம் இரக்கப்படுங்களேன்!" என்று அவன் வாயெடுக்காமல் கத்திக்கொண்டேயிருந்தான்.

பதினாறும் நம்பர் பஸ்ஸை எதிர் பார்த்து அரைமணி நேரமாக நானும் அந்தக் க்யூ வரிசையில் ஒருத்தனாக நின்றுகொண்டிருந்தேன். "ஐயாமார்களே! அம்மாமார்களே! ஒரு காலணா கொடுங்களேன்!" அவன் குரல் அவன் கெஞ்சுதல் என் மனதை வேதனையடையச் செய்தது. பர்சை அமுக்கிப் பார்த்தேன். அதில் ஒரு நாலணாத் துட்டுமட்டும் வெறிச்சென்று கிடந்தது. அதை மாற்றியாவது அவனுக்கு ஒரு அணாக் கொடுக்கவேண்டுமென்று மனம் அடித்துக்கொண்டது. 'ஆமாம், அந்த நாலணாத்தானே இருக்கிறது. இதை வைத்துத் திரும்பி வீடுபோய்ச் சேரவேண்டுமே! இங்கிருந்து கெல்லீஸ் இரண்டணா; மறுபடி மவுண்ட் ரோட் இரண்டணா. அப்போ? மனதில் எழுந்த இந்தக் கேள்விக்குப் பதில் எனனிடமே இல்லை. பேசாமல் இருந்துவிடுவதைத் தவிர வேறு வழி இல்லை. கெல்லீஸ் சென்று பார்க்கப் போகும் நண்பனிடம் ஒரு ரூபாய் கைமாற்றாக வாங்கினால் போச்சு. அவன் ஒருவேளை வீட்டில் இல்லை; அப்போ? அதுவும் சரிதான். பிறகு, பிறகு, பிறகு......' கையிலெடுத்த பர்சை மறுபடியும் சேப்பியில் போட்டபடி அந்தப் பிச்சைக்காரக் குருடனையே வெறித்து நோக்கி நின்றேன்.

ஒரு நிமிஷம் குரலைச் சிறிது குறைத்து ஓய்ந்துபோய் நிற்பான். மறுபடியும் அதே பாட்டு: "சாமி! ஐயா! ஏழைமேல் இரக்கப்படுங்களேன்! இரண்டு கண்ணுமில்லாத குருடன் சாமி!" அவன் குரல் என் காதுகளைக் குத்திக்கொண்டேயிருந்தது. பர்சில் கிடக்கும் நாலணா என் கண்களையும், மனதையும் உறுத்திக்கொண்டேயிருந்தது. என்னையுமறியாமல் என் கைகள் மறுபடியும் சட்டைப் பையிலிருந்த பர்சை எடுத்தன. ஒவ்வொரு அறையாக, ஒரு ஒற்றை ரூபாய் நோட்டு எங்காவது பதுங்கி இருக்கிறதாவென்று ஆராய்ந்தன. நான் வைத்திருந்தால்தானே இருக்கும்! மறுபடியும் பர்சைப் பாக்கட்டில் போட்டுவிட்டு, 'எப்படா இந்த பஸ் வந்து தொலையும்' என்று பஸ் வரும் திசையை நோக்கி நின்றேன். அடிக்கடி என் கண்கள் அந்த ஏழைக் குருடனுக்கு அவ்வரிசையிலுள்ள யாராவது ஒரு காலணாப் போடுகிறார்களா வென்று கவனித்துக் கொண்டே இருந்தன.

யாருமே அவன் கூப்பாட்டுக்குப் பதில் இல்லாமல், அவன் சொன்னதையே திருப்பி திருப்பிச் சொன்னவண்ணம் நின்றுகொண்டிருந்தான். சீ! இவ்வளவு இரக்கமில்லாத ஜனங்களா? ஆளுக்கு ஓர் காலணாக் கொடுத்தால், அவனுடைய அன்றைய பசி ஆறும். ஆனால், அவர்கள் மனசு இளகவேண்டுமே; அவனைத் திரும்பிப் பார்ப்பதே தன் நாகரிகத்துக்குப் பங்கம் ஏற்பட்டுவிடுமோ? என்றபடி அவர்கள் தங்கள் பார்வைகளை வெவ்வேறு திசைகளில் செலுத்தினபடி நின்றுகொண்டிருந்தார்கள்.

அவனும் கடைசிவரை கேட்டுப் பார்த்துவிடுவது என்ற நினைப்பில், அந்த வரிசையின் முதல் நம்பரில் இருந்து கடைசி நம்பர்வரை ஒவ்வொருவராகக் கெஞ்சிப் பார்த்து அழுததுவிட்டான். சிறிது நேரம் தரையில் உட்கார்ந்தான். மறுபடியும் தன் கழியை ஊன்றி எழுந்தான்:

புதுமைப்பித்தனது மறைவிற்குப் பிறகும் அவரது துணைவியார் கமலா விருத்தாசலம் தொடர்ந்து கதைகள் எழுதிவந்துள்ளார் என்பது வரலாற்று உண்மை.

புதுமைப்பித்தனின் கடைசி இரவு 1948 இல்

கமலா விருத்தாசலம் எழுதிய கட்டுரையை ஜூலை 2013 இளந்தமிழன் இதழில் தி.வ.மெய்கண்டார் வெளியிட்டுள்ளார். இதோ அந்தக் கட்டுரையின் முகப்பு பக்கம்.



சி.சு.செல்லப்பா

"பேரளவு துன்பத்தின் சாயை படியாது வெறும் உயிர்ப்பிண்டமாக வாழ்ந்த ஒரு வாலிபன், திடீர் என்று உலகத்தின் இயல்பாக இருந்து வரும் கொடுமைகளையும், அநீதிகளையும், சமூகத்தின் வக்ர விசித்திங்களையும் கண்டு ஆவேசமாக, கண்டதைத் தனது மன இருட்டில் தோய்த்துச் சொல்லிய பேய்க்கனவுகளாகும். எனது கதைகளின் அதாவது பூர்வகதைகளின் கரு அது தான்'' என்று 1947 இல் புதுமைப்பித்தன் தன் கதைகளைப் பற்றிக் கூறியுள்ளார் என்பார் சி.சு.செல்லப்பா. (தமிழில் இலக்கிய விமர்சனம், எழுத்து பிரசுரம் ஜூலை 1974, சென்னை, பக்கம் 353).

வல்லிக்கண்ணன்

புதுமைப்பித்தன் தமிழ்ச்சிறுகதை இலக்கிய வளர்ச்சியிலும் வரலாற்றிலும் ஒரு மைல்கல். ஒரு திருப்புமுனை, ஒரு சகாப்தம் தமிழ்ச்சிறுகதை இலக்கியத்திற்காக சிறப்புமிக்க தலைமகனாகக விளங்கியவர் புதுமைப்பித்தன் என்று தொ.மு.சி. இரகுநாதன் போற்றுவார். (வல்லிக்கண்ணன், புதுமைப்பித்தன், புது டில்லி 1996, பக்கம் 82)

கு. அழகிரிசாமி (1923 - 5.7.1970)

நான் கண்ட எழுத்தாளர்கள் எனற நூலை கு.அழகிரிசாமி அக்டோபர் 1961 இல் 2 ரூபாய் விலையில் 135 பக்கங்களில் வெளியிட்டுள்ளார். சென்னை தமிழ்ப் புத்தகாலயம் வெளியிட்டுள்ள அந்த நூலில் 10 எழுத்தாளர்கள் பற்றி எழுதியுள்ளார். அதில் புதுமைப்பித்தன் பற்றி 78 வது பக்கம் முதல் 107 வது பக்கம் வரை எழுதியுள்ளார். அதில் **என் கதைகள் என் குழந்தைகள்** *என்று புதுமைப்பித்தன் அடிக்கடிச் சொல்லுவார் என்று குறிப்பிட்டுள்ளார் கு.அழகிரிசாமி.*

ஆசிய ஜோதி மறைந்தது

புதுமைப்பித்தன் மறைந்தபோது 'தினசரி' பத்திரிகைக்கு கு.அழகிரிசாமி எழுதிய கட்டுரையின் தலைப்பு **'ஆசிய ஜோதி மறைந்தது'** *என்பதாகும்.*

பி. ஸ்ரீ. ஆச்சார்யா (16.4.1886 - 28.10.1981)

'நான் அறிந்த தமிழ் மணிகள்' என்னும் நூல் பி.ஸ்ரீ. ஆச்சார்யா எழுதியது 1988 இல் வெளிவந்தது. 32 ரூபாய் விலையுள்ள அந்த நூலை வானதி பதிப்பகம் 470 பக்கங்களில் வெளியிட்டது.

சிறுகதை உலகில் ஒரு மேதை

நான் அறிந்த தமிழ் மணிகள் இரண்டாம் பகுதி 101 பேர்களைப் பற்றியது. அதில் 71 வது கட்டுரை **'சிறுகதை உலகில் ஒரு மேதை'**.

"புதுமைப்பித்தன் எழுத்தாளராகத் தழைப்பதற்கு முன் எங்கள் ஊருக்கு (விட்டலபுரத்திற்கு) வந்து இருந்தார். ஏதாவதொரு பத்திரிகைக்கு எழுதிப் பார்க்கலாமா? என்று என்னிடம் ஆலோசனை கேட்கத்தான், நீங்கள் ஏதாவது எழுதித் தயாராக வைத்திருக்கிறீர்களா என்று கேட்டேன். அதற்கு அவர் பதில் சொல்லாமல் ஒரு துண்டுக் காகிதத்தை என்னிடம் கொடுத்தார். அதில் ஒரு பாம்பு படையெடுத்துச் சீறுவது போல் வரையப்பட்டிருந்தது. அது என்ன ஐயா என்று கேட்டதும் **'இன்ஜெக்ஷன் செய்யும் முறையை முதல் முதலில் கண்டுபிடித்த டாக்டர் இவர்' என்று பதில் வந்தது.** *உடனே இவர் தேடுவது சாதாரண வேலையல்ல. இவர் ஒரு மேதை என்பதை தெரிந்துகொண்டேன் (நான் அறிந்த தமிழ்மணிகள் பக்கம் 349)*

பாவலர் ஆ.முத்துராமலிங்கம்

'புதுமைப்பித்தன் பதிற்றுப்பத்து' *என்ற நூலைத் தந்தவர் எனது பிரியத்திற்குரிய பாவலர் ஆ.முத்து ராமலிங்கம். 2005 இல் 25 ரூ விலையில் 50 பக்கங்களில் வெளிவந்த அந்த நூல் புதுமைப்பித்தன் புகழ்பாடுகிறது.*

புதுமைப்பித்தனோடு இணைந்து தியாக வாழ்க்கை வாழ்ந்ததோடு நில்லாமல் புதுமைப்பித்தனைப் போலவே சமகாலத்தில் கதைகள் எழுதியவர் கமலாம்பாள்.

தினகரி சொக்கலிங்கம்

புதுமைப்பித்தனைத் தொடர்ந்து திருமதி கமலாம்பாள், அவர்களைத் தொடர்ந்து புதுமைப்பித்தனின் மகள் தினகரி

சொக்கலிங்கமும் கவிஞராக எழுத்தாளராகத் திகழ்கிறார். இதோ அவர் எழுதிய ஒரு கவிதையும் கட்டுரையும்.

எனது தந்தை

புதுமைப்பித்தன் நூற்றாண்டு விழா நடைபெற்று வரும் வேளையில் அவரைப்பற்றிய நினைவுகளைப் பகிர்ந்து கொள்வதில் மகள் என்ற முறையில் மிகுந்த மகிழ்வும் பெருமையும் அடைகிறேன்.

தன் வாழ்நாளில் அரை நூற்றாண்டைக் கூட கடக்க இயலாமல் விரைவிலேயே மறைந்து விட்ட என் தந்தையின் படைப்புக்களை விமர்சிக்கவும் - விவாதிக்கவும் இலக்கிய ஜாம்பவான்கள் ஏராளமானோர் இருக்கக் கூடும். ஆனால் அவரின் இன்னொரு பக்கத்தை, அன்பால் மட்டுமே பாசத்தால் மட்டுமே கட்டுண்டு கிடந்த மறுபக்கத்தை காணவேண்டுமெனில் அவரின் 'கண்மணி கமலாவை.. படிக்கவேண்டும்.

வாழ்க்கையில் துன்பமும் துயரமும் வந்து போகலாம். ஆனால் அதுவே வாழ்க்கையாகிவிட்டால்? அப்படியே வரினும் அவற்றை எப்படி மனதிலிருந்து கிள்ளி எறிய வேண்டும்.. அப்பா அம்மாவுக்கு எழுதிய கடிதங்கள் பல.. சான்றாக ஒன்று..

"கஷ்டங்களை நாம் வரவேற்க வேண்டாம், ஆனால் அவை நம்மைத் தொடரும்போது ஓடிவிட முயற்சி செய்யக் கூடாது. அந்த முயற்சியில் விளையும் போராட்டத்தில் துன்பம் பல மடங்காகிறது... துன்பத்தை நாம் எதிர்த்து நின்றால் தான் தப்ப முடியும்..

எத்தனை உண்மையான வார்த்தைகள்! இத்தகைய தைரிய எழுத்துகளால்தான் என் அம்மாவும் பக்குவப்பட்டிருப்பார்கள் என நினைக்கிறேன். வாழ்வில் எதிர்பாராத இடியாக இறங்கிய அப்பாவின் மறைவுக்குப் பின் இரண்டே வயதான என்னையும் ஆளாக்கிய அவரது துணிச்சலுக்கு - எதிர்நீச்சலுக்கு அப்பாவின் எழுத்துக்கள் தான் உறுதுணையாக இருந்தது என்பதில் ஐயமில்லை.

அப்பாவின் படைப்புக்களை படிக்கையில் மனம் முழுக்க நிறைந்து நிற்பவை அவரது "குழந்தைகள்"- வெங்கட் சுவாமி நாதன்! சொல்வது போல ".. இருப்பினும் தன் மனைவியிடமும், குழந்தையிடமும் அதியந்த பிரியம் அவருக்கு. அதுவும் அவரது எழுத்துக்களில் பிரதிபலிக்கும். அவருக்கு சற்று முன் அல்லது அவர் காலத்தில் வேறு எவரது எழுத்திலாவது குழந்தைகள் இவ்வளவு பிரியத்துடன் இவ்வளவு முறை அடிக்கடி எதிர்படுகிறார்களா? சந்தேகம் தான்..

புதுமைப்பித்தன் இலக்கியத் தடம் - வெங்கட் சுவாமிநாதன் பக்.252) அப்பாவின் அன்பை முழுமையாக அனுபவிக்க முடியாத ஏக்கம் எனக்கு ஆழ்மன துக்கம்.

அப்பாவின் தோற்றம், நகைச்சுவை கொப்பளிக்கும் பேச்சுத்திறன் - இவை எல்லாவற்றுக்கும் மேலாக தன் படைப்புகளில் கொண்டிருந்த தன்நம்பிக்கை, அந்த கம்பீர கர்வம் இவையெல்லாம் நம்மை வியர்க்க வைக்கிறது.

"நான் கேட்டது, கண்டது, கனவு கண்டது, காணவிரும்பியது, விரும்பாதது ஆகிய சம்பவக் கோவைகள்தான் இவை" - என தன் படைப்புகளைப்பற்றி அவரது பார்வையே அவரை நமக்கு இனம் காட்டும். சிறந்த படைப்பாளியாக மட்டுமல்லாது படிப்பாளியுமாக விளங்கிய அவர் தன் இறுதிக் காலத்தில் கூட இலக்கிய உலகம் பற்றிய நினைவாகவே இருந்தார்.

"சிதம்பரம், இலக்கிய உலகம் எப்படி இருக்கிறது அதைப்பற்றி ஏதாவது சொல்லு.. படித்து தெரிந்துக் கொள்ள சக்தி இல்லை.. நீ சொல்லியாவது தெரிந்து கொள்கிறேன்.

உயிர் பிரியும் கடைசி நிமிடம் அம்மாவிடம் சொல்கிறார் "கமலா கடைசியாக நான் இந்த உலகத்திற்கு அளிப்பது ராஜமுக்தியும் - தினகரியும்தான்.."

தினகரி சொக்கலிங்கம் (புதுமைப்பித்தன் மகள்)

எந்தையே எங்கே சென்றாய்?

'என் தந்தையை நானும் கண்டதில்லை
அந்த அன்பு மழையில் நனைந்ததில்லை
என் பிஞ்சு முகத்தை அவர் கண்டதுண்டு
கொஞ்சு மொழியைக் கேட்டதில்லை
எந்தையே, எங்கே நீ சென்றாய்?
சிந்தை மயங்கி அழுகின்றேன்
நொந்த மனத்திற்கு மருந்தாக
ஒரு முறை உன்னுருவைக் காட்டாயோ?
... முன்னும் பின்னும் தேடுகிறேன்
அண்ணன் தம்பி யாருமில்லை.
அக்காள், தங்கை எவருமில்லை
ஒற்றை மரமாய் நிற்கிறேன்!'

1971ல் ஆனந்த விகடனில் புதுமைப்பித்தன் மகள் தினகரி சொக்கலிங்கம் எழுதிய கவிதை.

தனது கணவர் குறித்து கமலாம்பாள்

(செம்மலர் நவம்பர் 1998, பக்கம் 11)

''ராசா! முதல்ல நீ சாப்பிடு...''

* ''அவர் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் நகைச்சுவை கொப்பளிக்கும். பேச்சுத் துணைக்கு யாரும் இல்லையானால், கம்பராமாயணத்தை எடுத்துக் கொள்வார். அதை எனக்குப் படித்துக் காட்டுவார். என்னைப் படிக்கச் சொல்லிக் கேட்பார். புரியாத இடங்களைப் புரிய வைப்பார். அவருக்கு எதில் எல்லாம் விருப்பம் இருக்கிறதோ, அதையெல்லாம் நானும் விரும்பும்படிச் செய்வார்.

'மனைவி என்றால் கணவனுக்குத் தொண்டு செய்யும் அடிமை' என்னும் மனப்பான்மை அவரிடம் கிடையாது.

* நாங்கள் சினிமாவுக்குப் போனால் நைட் ஷோ தான் அதிகமாகப் போவோம். தமிழ்ப் படங்களுக்குப் போனால் அவர் தூங்கி விடுவார். தமிழ் சினிமாக் கதைகள் குடுகுடுப்பைக்காரன் சட்டை மாதிரி பல வெளிநாட்டுக் கதைகளைப் பிய்த்து எடுத்து ஒட்டுப் போட்டுத் தைத்தவை என்பார் அவர்.

* நானும் அவரும் ரிக்ஷாவில் ஏறி ஹோட்டலுக்குப் போவோம். சாப்பிட்ட பிறகு, நாங்கள் சாப்பிட்ட மாதிரி இன்னும் ஒரு பார்சல் அவர் கட்டச் சொல்வார். நான் எதற்கு என்று கேட்டால் – 'சும்மா இரு கமலா!' என்று சொல்லிவிட்டு எங்களை ஏற்றிக் கொண்டு வண்டி இழுத்துக் கொண்டு வந்த ரிக்ஷாக்காரனிடம் சென்று 'ராசா! முதல்ல நீ சாப்பிடு, அப்புறமா வண்டிய எடு' என்பார்.

மிச்சமாகும் நாலணா நாணயங்களைக் கூஜாவில் போட்டு சேர்த்து வைப்பார். பழைய சட்டைகளைப் பாத்திரக்காரனுக்குப் போட விட மாட்டார். 'உன் துணியை என்னவானும் செய்துக்கோ. என் வஸ்திரத்தில் கை வைக்காதே' என்று பழைய ஜிப்பா, வேட்டிகளை எல்லாம் டிரங்குப் பெட்டியில் பத்திரப்படுத்தி வைப்பார். தீபாவளி வந்தால், அந்தப் பேட்டையிலிருக்கும் ரிக்ஷாக்காரர்கள் எல்லாம் வீடு தேடி வந்து விடுவார்கள். ஒவ்வொருவருக்கும் தலைக்கு நான்கு அணா கொடுத்து, ஒரு வேட்டியோ, ஜிப்பாவோ கொடுப்பார். அதனால் அவரைத் தெருவில் கண்டால் அந்த ரிக்ஷாக்காரர்கள் நடந்து போகவே விட மாட்டார்கள். ரிக்ஷாவில் ஏற்றிக்கொண்டு சேர வேண்டிய இடத்தில் சேர்த்து விடுவார்கள்''.

புதுமைப் பித்தன் மனைவி திருமதி கமலா,
பத்திரிகைப் பேட்டியிலிருந்து

எஸ்.சிதம்பரம் - கடைசி நாட்களில் புதுமைப்பித்தன்

எஸ்.சிதம்பரம் சொல்லிய **'கடைசி நாட்களில் புதுமைப்பித்தன்'** *என்ற 36 பக்கங்களைக் கொண்ட நூலினை எனது நண்பர் இளசைமணியன் தொகுத்து 2005 இல் வெளியிட்டார். அந்த நூலில் பக்கம் 26,27 இல் வரும் செய்தி இதோ.*

......அதோ, அதோ காட்சி தெளிய ஆரம்பித்தது. ஓலைப்பந்தலும், கட்டிலும் அதன் பக்கவாட்டிலிருந்த நெல் நாழியும் சாணிப்பிள்ளையாரும் எல்லாம் கண்களிலே தெரியவாரம்பித்தன. உலக வெளிச்சத்தையும் பக்கத்து அரவத்தையும் எனது புலன் உணர ஆரம்பித்தது.

புதுமைப்பித்தனின் பிரேதத்தைக் குளிப்பாட்டிக் கட்டிலிலே கிடத்தினார்கள். கமலாம்பாள் அருகிலே கதறியதும் கண்டேன். உயிரோடு இருக்கும்போது தலை வணங்கா மன்னனாக விளங்கியவரின் உடல் அங்கு கூடியிருந்த புரோகிதப் பிண்டங்களின் ஆட்சிக் கெல்லாம் உட்பட்ட கோலத்தைக் கண்டபோது...

குளிப்பாட்டி, கண்களிலே சந்தனம் அப்பி, திறக்காத வாயைத் திறந்து மஞ்சள் அரிசியைத் திணித்து என்னவெல்லாம் செய்தார்கள்.

'அறுப்பதற்கு'க் காத்திருந்தவள் மேலே, கச்சைகளும், "வெள்ளை"களும் எறியப்பட்டன.

கடைசிப்பரிசு - விவாகச்சோலை

எனக்கு இந்தக் கோலம் வேண்டாம், என்னை விடுங்கள். அலங்கோலம் அவருக்குப் பிடிக்காதே..... என்னையேன் அசிங்கப்படுத்துகிறீர்கள்.....? எனக் கதறினார் ஸ்ரீமதி கமலா.

யார் யாரோ வந்தனர். சடலத்தை கச்சைத் துணியால் மூடினர். அவ்வளவுதான் ஸ்ரீமதி கமலா துள்ளி எழுந்தார்.

"ஆக்கம் தந்த கண்ணா! உனக்கு கச்சை தானா மிச்சம் தள்ளுங்கோ" என ஓலமிட்டு வீட்டிற்குள் ஓடினார்.

வரும்போது விலையுயர்ந்த தனது பட்டுச் சேலையை எடுத்துவந்து, பிரேதத்தை மூடினாள். "இதுதான் எனது

கடைசிப்பரிசு, கண்ணா! எனது விவாகச்சேலை' என்றார் ஸ்ரீமதி கமலா.

புதுமைப்பித்தன் மறைவிற்குப் பின்பும் காதல் ஆண்டு மலரில், கலைக்கதிரிலும் தொடர்ந்து கதைகள் எழுதி புதுமைப்பித்தன் அடிக்கடி எழுது! எழுது! என்று கூறிய அன்புக் கட்டளையை நிறைவேற்றியவர் ஸ்ரீமதி கமலா அம்மையார்.

இந்தத் தகவலைச் சொல்வதற்காக இச்சிறு நூலைத் தந்துள்ளேன். புதுமைப்பித்தன் குறித்து இதுவரை நிறைய நூல்கள் வெளிவந்துவிட்டன. இந்த நூலை வாசிப்பதன் மூலம் துளி அளவேனும், புதுமைப்பித்தனைப் பற்றியும் அவரது குடும்பத்தைப் பற்றியும் கூடுதலாக அறிந்து கொண்டோம் என்று யாராவது கருதினால் அதுபோதும் எனக்கு.

1975இல் புதுமைப்பித்தன் கதைகள் குறித்து கட்டுரை எழுதி பரிசுபெறத் தவறிய எளியேனின் உள்ளத்தில் நீறுபூத்த நெருப்பாக இருந்த புதுமைப்பித்தனைப் பற்றிய உணர்வுகள் 45 ஆண்டுகள் கழித்து வெளியிட வாய்ப்பளித்த இறைவனுக்கும் காலத்திற்கும் நன்றி.

– செ.திவான்

தொகுக்கப்படாத படைப்புகளைத் தேடும்போது தொகுக்கப்பட்டவை எவை என்பதைக் கணக்கிட்டுப் பட்டியலிட வேண்டியிருந்தது. இதனைச் செய்வதற்கும் கூட இன்று புத்தகச் சந்தையில் கிடைக்கும் புதுமைப்பித்தன் நூற்பதிப்புகள் போதமாட்டா என்பதைச் சொல்லித்தான் ஆகவேண்டும்.

ஆ.இரா. வேங்கடாசலபதி
அக்டோபர் 1998
அன்னை இட்ட தீ முன்னுரையில்

புதுமைப்பித்தனின் மகள் தினகரி சொக்கலிங்கத்துடன் நூலாசிரியர் செ. திவான்